REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஒகஸ்ட் 17 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
வருட. 92 இல. 196 | Saturday 17, August, 2024 | 12 பக்கங்கள் | 50/-

தேர்தல் பிரசார காலங்களில்

## கட்டவுட், பதாகைகளை அகற்ற 1,500 பணியாளர்கள் நியமனம்

தேர்தல் பிரசார காலங்களின் போது பல்வேறு அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை விளம்பரப்படுத்த பயன்படுத்தும் கட்டவுட்கள், போஸ்டர்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத அலங்காரங்களை அகற்றுவதற்காக பொலிஸ் திணைக்களத்துக்கு சுமார் 1,500 பணியாளர்கள் தற்காலிக அடிப்படையில் பணிக் கமர்த்தப்பட்டுள்ளனர். 06

# ஜனாதிபதி ரணிலுக்கு 34 கட்சிகள் ஆதரவு

## 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் நேற்று கைச்சாத்து

ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து 34 கட்சிகள் நேற்று 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் நோக்குடன் 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கை கைச்சாத்தானது.

அரசியல் கட்சியொன்றை உருவாக்கும் நோக்கத்திலன்றி நாட்டை பற்றிய நோக்கை கொண்டு 34 அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகள் உள்ளடக்கிய 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு பத்தரமுல்ல 'வோர்ட்ஸ் ஏட்ஜ்' ஹோட்டலில் நேற்று (16) முற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 34 கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளாகிய பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி பிரதமர் 06




## எதிர்காலத்தை கட்டியெழுப்புவதே 'இயலும் ஸ்ரீலங்கா' வின் நோக்கம்

### அரசியல் கட்சியை ஆரம்பிப்பது அல்ல - ஜனாதிபதி

34 அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகள் உள்ளடக்கிய 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் கையெழுத்திடப்பட்டுள்ளது. அரசியல் கட்சியொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் இதில் கையெழுத்திடவில்லை. அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை கட்டியெழுப்பவே இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அன்று ஏற்பட்ட பொருளாதார சவாலை எதிர்கொள்ள முடியாது என்று தப்பி ஓடியவர்கள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. நாட்டை கட்டியெழுப்ப இயலும் என்பதை நம்பி, 06

முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர்

## அலி சாஹிர் மௌலானா ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

### நேற்று நேரில் சந்தித்து உறுதிமொழி வழங்கினார்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அலி சாஹிர் மௌலானா ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் 06

## மக்கள் மீது எல்லையற்ற சுமைகள்; IMF நிபந்தனைகளை தளர்த்துவோம்

### கண்டியில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு




மக்கள் மீது எல்லையற்ற சுமையை சுமத்தியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை தளர்த்துவதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இன, மதம், கட்சி வேறுபாடின்றி மக்களை மையமாகக் கொண்ட சிறந்த அரச சேவையை செயல்படுத்த உறுதிமொழி எடுப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்களை கையளித்த பின்னர் நேற்று (16) கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்று வழிபட்ட எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்களுக்கு 06

அநுராதபுரம் நகரில் இன்று

## ஜனாதிபதி ரணில் பங்கேற்கும் முதலாவது பிரசார கூட்டம்



ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் ஆரம்ப பொதுக்கூட்டம் அநுராதபுரம் சல்காடு விளையாட்டரங்கில் இன்று (17) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க 06



சஜித் நேற்று குருநாகலில்...

நாமல் 21 இல் அநுராதபுரத்தில்...

அநுர இன்று தங்காலையில்...

தமிழின படுகொலை நினைவுத்தூபி;

## கனடாவில் சிலை அமைப்புக்கு இலங்கை அரசு கண்டனம்

கனடாவின் சிங்குவாகசி பூங்காவில் தமிழின படுகொலை நினைவுத்தூபி நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டுவதற்கு எடுக்கும் முயற்சியை இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, கனேடிய உயர்ஸ்தானிகரிடம் இலங்கை அரசாங்கத்தின் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று (16) கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து, இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கம் விடுத்திருந்த கடுமையான ஆட்சேபனைகளை மீண்டும் வலியுறுத்தினார்.

கனடாவுக்குள் வாக்கு வங்கி அரசியலுக்காக தொடர்ந்து பரப்பப்படும் இந்த பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தினார்.

பிரம்டன் நகர சபையின் தவறான அறிவுரையற்ற 06

கடலோர பாதுகாப்பு படையின்

## பயிற்சி திறன்களை மேம்படுத்த புதிய கடல்சார் பயிற்சி நிலையம்



இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பயிற்சி திறன்களை மேம்படுத்துவதற்காக ShipinaBox கடல்சார் பயிற்சி நிலையம் கிரிந்தவில் திறந்து 06


## தாய்லாந்தின் புதிய பிரதமராக பேடோங்டார்ன் ஷினவத்ரா தெரிவு



தாய்லாந்தின் புதிய பிரதமராக பேடோங்டார்ன் ஷினவத்ராவை அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

37 வயதுடைய பேடோங்டார்ன், ஃபியூ தாய் கட்சியின் தலைவர். இவர் முன்னாள் தாய்லாந்து பிரதமர் தக்சின் ஷினவத்ராவின் மகள் 06

## தங்க விலையில் சற்று வீழ்ச்சி




இலங்கையில் கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலையானது சற்று ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் நேற்றைய (16) நிலவரப்படி 06

## நாகை–KKS கப்பல் சேவை நேற்று முதல் ஆரம்பமானது

### 5 இலங்கையர் உட்பட 44 பயணிகள் வருகை

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**



நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. 5 இலங்கையர் உட்பட 44 பயணிகள் 06

ஐக்கிய மக்கள் சக்தியின்

## பௌசி, குமாரவெல்கம ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



ஐக்கிய மக்கள் சக்தியின் ஏ.எச்.எம்.பௌசி மற்றும் குமாரவெல்கம ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் 06


முரண்பாடுகளை விட்டு தள்ளி

## தமிழர் தரப்பு பொது வேட்பாளருக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்



தமிழ் மக்களின் அடையாளமாக விளங்கும் பா. அரியநேத்திரனுக்கு அனைத்து தமிழர்களும் வாக்களிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். 06

## பாகிஸ்தானில் முதலாவது Mpox நோயாளர் பதிவு



உலக பொதுச் சுகாதார அவசரகால நிலையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள குரங்கம்மை நோயினால் பாதிக்கப்பட்ட முதலாவது நபர் பாகிஸ்தானில் கண்டறியப்பட்டுள்ளார்.

34 வயதுடைய நபர் ஒருவருக்கு குரங்கம்மை நோய் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சான்பிரான்சிஸ்கோவிலும் குரங்கம்மை நோய் நிலைமை கண்டறியப்பட்டுள்ளது. அந்நகரின் 06

## சிவப்பு சீனிக்கு அதிக கிராக்கி; சீனியில் கலப்படம்

### நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை



நாட்டுக்குள் அதிகளவாக சிவப்பு சீனி பாவனை அதிகரித்துள்ளமையால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனியுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனியை கலந்து விற்பனை செய்யப்படுவதாக தெரியவந்துள்ளது. சந்தையிலுள்ள சிவப்பு சீனி மோசடி தொடர்பான விபரங்களை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளிப்படுத்தியுள்ளது.

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த தகவல் 06

## விசர் நாய்க்கடி அதிகரிப்பு; இதுவரையில் 11 பேர் மரணம்

### விழிப்புணர்வு இல்லாமையே காரணம்



தொற்றுநோயியல் நிறுவனம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் விசர் நாய்க்கடியால் இந்த ஆண்டில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

விசர் நாய்க்கடி நோயான 06

## மாற்றங்களை கொண்டுவர தயார் எமது மக்களே முடிவுகளை எடுப்பர்

### நாமல் எம்.பி.



"நாம் எமது நோக்கத்தை மக்களிடம் முன்வைப்போம். எனினும் மக்களே அவர்களது முடிவுகளை எடுப்பார்கள்" என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு பொருத்தமான பொருளாதார, சமூக மாற்றங்களை கொண்டுவர பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது. சிறிலங்கா பொதுஜன பெரமுன என்பது வெற்றியடையும் அரசியல் கட்சியாகும்.

தொழில் வாய்ப்பு, கைத்தொழிலை பெருக்கி நாட்டிலுள்ள அனைவரையும் பாதுகாக்க முடியுமான 06

# 34 கட்சிகள் 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கை கைச்சாத்து நிகழ்வு





# கண்டி தலதா மாளிகையில் ஜனாதிபதி ரணில் வழிபாடு

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுவை நேற்று முன்தினம் (15) கையளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார்.

தலதா மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேரர் வரவேற்றார். பின்னர் தலதா மாளிகையின் மேல்மாடிக்கு சென்ற ஜனாதிபதி, மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தலதா மாளிகைக்கு வருகை தந்த மக்களிடம் நலன் விசாரித்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். இதன்போது ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக அவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.





பின்னர் மல்வத்து மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து பீடத்தின் மகாநாயக்க வண. ஸ்ரீ சுமங்கல தேரரின் ஆசிர்வாதத்தை பெற்றுக்கொண்ட பின்னர் தேரருடன் சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார். தேரர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார்.

அதன் பின்னர் அஸ்கிரி மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க வண. வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரருடன் சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார். அஸ்கிரி மகாநாயக்க தேரர் தலைமையிலான அஸ்கிரி பீடத்தின் மகா சங்கத்தினர், இதன்போது ஜனாதிபதிக்கு பிரித் பாராயணம் செய்து ஆசி வழங்கினர்.





ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் முதல் பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அநுராதபுரம் கடபனஹ பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு நேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அநுராதபுரம் சென்ற அவர், ஜயஸ்ரீமஹா போதிக்கு அருகில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நோக்குடன் நேற்று (16) காலை 300 பிக்குகளுக்கு தானம் வழங்கி சமய வழிபாடுகளை மேற்கொண்டார்.

(படம்: சுலோச்சனா கமகே)

# நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணிலின் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு

## பல்வேறு கட்சிகளின் அரசியல் செயற்பாட்டாளர் ஜனாதிபதியுடன் கைகோர்ப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார், நேற்று முன்தினம் (15) காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் தாம் ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்களை கையளிக்க செல்வதற்கு முன்னர் கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதியின் அரசியல் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இதேவேளை இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக முன்னாள் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஸ்ரீயானி விஜேவிக்கிரம தெரிவித்தார்.

ஜனாதிபதியை (14) பிற்பகல் சந்தித்து இது குறித்து தெரிவித்ததாகவும், நாட்டில் நெருக்கடியான சூழல் ஏற்பட்ட போது ஜனாதிபதியினால் சவாலை ஏற்று நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வர முடிந்ததாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் நாட்டுக்கு தொடர்ந்தும் தேவைப்படுவதாகவும் ஸ்ரீயானி விஜேவிக்கிரம சுட்டிக்காட்டினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் ஷங்கரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஜனாதிபதியின் வெற்றிக்காக தன்னை அர்ப்பணிப்பதாக உறுதியளித்தார்.









அதேபோன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயாஷான் நவநந்தனவும் (14) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்த அர்ப்பணிப்பதாக உறுதியளித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடிய தலைவர் என்பதனால் ஜனாதிபதிக்கு பலமாக இருக்க தீர்மானித்துள்ளதாகவும், வீழ்ச்சியடைந்த நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல முடியும் என்பதை ஜனாதிபதி தனது செயற்பாட்டின் மூலம் நிரூபித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் கலாநிதி சிறிமசிறி ஹப்புஆராச்சியும் (14) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஜனாதிபதியின் வெற்றிக்காக தன்னை அர்ப்பணிப்பதாக தெரிவித்தார்.

# சில தலைவர்கள் வேறு கட்சியுடன் இணைந்தாலும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஜனாதிபதிக்கு முழு ஆதரவு

## ஸ்ரீ.ல.சு. கட்சி செயலாளர் துமிந்த திஸாநாயக்க

**மர்லின் மரிக்கார்**



சில தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தம் அரசியல் பாரம்பரிய பழக்கத்தின்படி நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்காது வேறு கட்சியுடன் இணைந்து கொண்டுள்ள போதிலும் ஜனாதிபதி தலைமையில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதில் தமிழ், முஸ்லிம் மக்கள் உறுதியாக உள்ளனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கா நேற்று தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி, வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டை பொறுப்பெடுக்க எவரும் முன்வராத சூழலில் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலப் பகுதிக்குள் அந்த வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுத்தார். அதனால் நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்காக ஸ்ரீ.ல.சு. கட்சி என்ற வகையில் நாம் அவருக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குகின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

மலையகப் பெருந்தோட்ட மக்கள் இந்தியாவில் இருந்து இங்கு வந்து 200 வருடங்களான போதிலும் அவர்கள் இந்நாட்டு பிரஜைகள். அவர்களை பெருந்தோட்ட தமிழர்கள் என்றோ, மலையகத் தமிழர்கள் என்றோ பிரிக்க வேண்டிய தேவை இல்லை என்ற நிலைப்பாட்டையும் ஜனாதிபதி கொண்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஸ்ரீ.ல.சு. கட்சி தலைமையகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் ஜனாதிபதி தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். அதனால் நாட்டில் மீண்டும் பொருளாதார வீழ்ச்சியும் நெருக்கடியும் ஏற்பட்டிடக்கூடாது என்பதை விரும்பும் அனைத்து மக்களும் ஜனாதிபதிக்கு ஆதரவு நல்குகின்றனர் என்றார்.

# மு.கா மற்றும் அ.இ.ம.கா.வின் முடிவு ஒட்டுமொத்த முஸ்லிம்களது முடிவல்ல







## ஜனாதிபதி ரணிலுக்கு நன்றிக்கடன் செலுத்த வட, கிழக்கு மக்கள் தயார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் நன்றிக்கடன் செலுத்த தயாராகிவிட்டனர். யாரை ஆதரிப்பதென அவர்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டனர். கட்சித் தலைவர்கள் சஜித்தை ஆதரிக்க முடிவு செய்தாலும், அந்தக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க தயாராகிவிட்டதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மு.கா.வினதும் அ.இ.ம.கா. கட்சியினதும் முடிவு ஒட்டுமொத்த முஸ்லிம்களின் முடிவல்ல. சிலர் சஜித்துடன் டீல் அடித்து செயற்படுகின்றனர். நாடு குறித்து சிந்திப்பவர்கள் ஜனாதிபதி ரணிலையே ஆதரிப்பார்களெனவும் அவர்கள் கூறினர்.

சஜித் பிரேமதாசவை ஆதரிக்க மு.கா. மற்றும் அ.இ.ம.கா. கட்சித் தலைவர்கள் முடிவு செய்தாலும், கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் மக்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரத்தை பலப்படுத்தவே முன்வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.எம்.முஷாரப், இஷாக் ரஹ்மான், அலி சப்ரி ரஹீம் ஆகியோரே இவ்வாறு தெரிவித்தனர்.

2015 ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை ஆதரிக்க ஏற்கெனவே முஸ்லிம்கள் தீர்மானித்திருந்த நிலையில் இறுதி நேரத்தில் முஸ்லிம் கட்சித் தலைமைகள் அந்த முடிவை எடுத்ததாக தெரிவித்த அவர்கள், இம்முறையும் கட்சித் தலைவர்கள் இறுதி நேரத்தில் தமது முடிவை மாற்றக்கூடும் எனவும் குறிப்பிட்டனர்.

இச்சந்திப்பில் மேலும் தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. எஸ்.எம்.எம்.முஷாரப்,

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்சி சார்பில் தெரிவான 4 எம்.பிகளில் மூவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர். கட்சித் தலைவர் ரிஷாட் பதியுதீன்மாத்திரமே சஜித்துக்கு ஆதரவான முடிவில் இருக்கிறார்" என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்த போது,

"நான் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உப தலைவராக இருக்கிறேன். யாரை ஆதரிப்பது என நாடெங்கும் மக்கள் கருத்தறிவதாக கட்சித் தலைவர் கூறினாலும் கிளிப்பிள்ளை போல சொல்லிக் கொடுத்ததைத் தான் அங்கு பலரும் பேசினார்கள்.

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க தயாராகிவிட்டனர். அவர் தான் நாட்டை மீட்டார். இன, மத பேதங்களை ஒழிக்கக்கூடிய தலைவர் அவர் ஒருவர் தான்" என்றார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 17 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
லுஹர் - 12.16
அஸர் - 03.31
மஃரிப் - 06.26
இஷா - 07.38

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 01
ராகுகாலம் : காலை : 9.05 - 10.35வரை
சுபநேரம் : மாலை : 3.05 - 4.35வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவராக நீதியரசர் R.M.சோஹித ராஜகருணா நியமனம்



மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக நீதியரசர் ஆர். எம்.சோஹித ராஜகருணா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக ஆர்.எம். சோஹித ராஜகருணா நேற்று (16) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கடமையாற்றிய நிஷ்சங்க பந்துல கருணாரத்ன,வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பும் வரை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

## சபாநாயகருடன் பலஸ்தீன தூதுவர்சந்திப்பு



இலங்கையிலிருந்து பிரியாவிடை பெற்றுச் செல்லும் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச் செய்த், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை (07) பாராளுமன்றத்தில் சந்தித்தார். பாராளுமன்றத்திலுள்ள சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்து கொண்டார்.

# யாத்திரிகர்கள் கடவுச்சீட்டு பெறுவதில் நிலவும் தடைகளை உடன் நீக்க ஏற்பாடு




குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் இந்த ஆண்டில் ஒரு மில்லியன் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த 2023ஆம் ஆண்டில் 230,000 பேர் மட்டுமே புலம்பெயர்ந்துள்ளனர்,

பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற பகிரங்க மற்றும் பொறுப்புடைமை அரசாங்கம் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுக் கூட்டத்தின் போது இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய இது குறித்து தெரிவிக்கையில், 2023ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டன. ஆனால் அவற்றில் 23% மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் மீதமுள்ள 77% கடவுச்சீட்டுகள் பயன்படுத்தப்படவில்லை என்றும் கூறினார். இதேவேளை இந்தியா மற்றும் நேபாளத்துக்கு செல்லும் யாத்திரிகர்களுக்கு கடவுச்சீட்டு பெறுவதில் உள்ள தடைகள் உடனடியாக நீக்கப்படும் என குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

பணம் செலுத்தி கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வது மக்களின் உரிமை என்பதால், மக்கள் சிரமத்திற்கு உள்ளாகாத வகையில், கோரப்படும் கடவுச்சீட்டுகளை வழங்குவது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பொறுப்பாகும் என பகிரங்க மற்றும் பொறுப்புடைமை அரசாங்கம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

## தினகரன் 92 வருடங்களுக்கு முன் தினகரன்
### இன்று 17 ஓகஸ்ட் 1932


வியாபாரத் தளர்வு

சென்றமாதம், இலங்கை ஏற்றுமதிப் பொருட்களில் பெரும் குறைவு ஏற்பட்டிருக்கிறது. 1909ம் ஆண்டின் பின் ஏற்றுமதிப் பொருட்களில் ஏற்பட்ட மிக அதிகமான குறைவு, சென்ற மாதத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், தேயிலை ஏற்றுமதியில் 67.5 லெக்ஷம் ராத்தலுக்கு அதிகமான குறைவு உண்டாயிருப்பதே ஆகும்.

ஆனால், தென்னைப் பொருள் ஏற்றுமதியும், ரப்பர் ஏற்றுமதியும் சென்ற மாதம் சிறிது அதிகப்பட்டிருக்கிறது.

### வியாபாரத் தளர்வு

சென்றமாதம், இலங்கை ஏற்றுமதிப் பொருட்களில் பெரும் குறைவு ஏற்பட்டிருக்கிறது. 1909ம் ஆண்டின் பின் ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்பட்ட மிக அதிகமான குறைவு, சென்ற மாதத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், தேயிலை ஏற்றுமதியில் 67.5 இலட்சம் ராத்தலுக்கு அதிகமான குறைவு உண்டாயிருப்பதே ஆகும்.

ஆனால், தென்னைப் பொருள் ஏற்றுமதியும், ரப்பர் ஏற்றுமதியும் சென்ற மாதம் சிறிது அதிகப்பட்டிருக்கிறது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## கந்தன்கமுவ விகாரையில் தே.ம.ச. வேட்பாளர் அநுர



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க, மீரிகம கந்தன்கமுவ ஸ்ரீவித்யாவாச பிரிவென் மஹா விகாரையில் ராமஞ்ஞ மஹா நிக்காயவின் மஹாநாயக்க தேரர் சங்கைக்குரிய மக்குலேவே விமலநாயக்க தேரரை (16) முற்பகல் சந்தித்தார். நாட்டில் நிலவுகின்ற அரசியல் நிலைமை பற்றி மஹா சங்கத்தினருடன் கலந்துரையாடிய அநுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அவர்களின் நல்லாசியை பெற்றுக்கொண்டார். இத்தருணத்தில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத்தும் பங்கேற்றார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவர் அலி சாஹிர் மௌலானா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்துக்கு குழுவினருடன் சென்ற போது பிடிக்கப்பட்ட படம்.

## குரங்கம்மை வைரஸ் பரவல் தீவிரம்; WHO வினால் வழிகாட்டல் கோவை

### சுகாதார அமைச்சு விரைவில் வெளியிடும்

உலகை தற்போது அச்சுறுத்தி வரும் குரங்கம்மை வைரஸ் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வழிகாட்டல் கோவை வெளியிடப்பட்ட பின்னர் இலங்கைக்கான வழிகாட்டல் கோவையை வெளியிடவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

Mpox எனப்படும் குரங்கம்மை தொற்று தொடர்பில் உலகளாவிய ரீதியில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

வைரஸ் தொற்று இலங்கைக்குள் பரவாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதாரம் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

அதேவேளை Mpox வைரஸ் தற்போது மத்திய மற்றும் கிழக்கு ஆபிரிக்க வலய நாடுகள் முழுவதும் பரவியுள்ளது. அத்தோடு ஆபிரிக்க கண்டத்துக்கு வெளியே முதன்முதலில் குரங்கம்மை பாதிப்பு சுவீடனில் பதிவாகியுள்ளது.

குரங்கம்மை, கொடிய நோய்த்தொற்று வகையைச் சேர்ந்தது என்றும், இது முதலில் கொங்கோ நாட்டில் வேகமாக பரவியதால் சுமார் 450 நபர்கள் உயிரிழந்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

## 13 நாடுகளில் குரங்கம்மை தீவிரம்; சுகாதார அவசர நிலை அறிவிப்பு

உலகில் 13 நாடுகளில் குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு குரங்கம்மை நோய் தீவிரமடைந்து வருவது கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் அண்மையில் வெளியிட்ட அறிவிப்பில் குரங்கம்மை காய்ச்சல் பொதுச் சுகாதார அவசரகால நிலையாக உருவாகி உள்ளது.

ஐநூறுக்கும் மேற்பட்டோர் இதனால் உயிரிழந்துள்ளனர். இதனை தடுத்து நிறுத்த சர்வதேச உதவி வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. இதன்படி நடப்பு ஆண்டில் குழந்தைகள் மற்றும் முதியவர்களென 13 நாடுகளில் குரங்கம்மை கண்டறியப்பட்டுள்ளது.

இவற்றில் கொங்கோ நாட்டில் 96 சதவீத அளவு பாதிப்புகளும் மற்றும் மரணங்களும் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடும் போது, கொங்கோவில் பாதிப்புகள் 160 சதவீதமும், மரணங்கள் 19 சதவீதமும் உயர்ந்துள்ளன.

06

## மியன்மாரிலிருந்து இலங்கையர் 34 பேரை மீட்பதற்கு நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய



ஆட்கடத்தலுக்கு உள்ளான 34 இலங்கையர்கள் மியன்மாரில் இருந்து மீட்கப்பட உள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார். மியன்மாரில் உள்ள சட்ட விரோத முகாம்களில் இருந்து மீட்கப்பட்டு தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ள 20 இலங்கையர்கள் தொடர்பில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். மீட்கப்பட்ட மாணவர்கள் நல்ல உடல் நிலையில் உள்ளனர். இருப்பினும் அவர்கள் நெருக்கடிகால மதிவளத் துணைக்கு (Counseling) அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவித்த அவர் , அவர்களிடம் வீடியோ அழைப்பில் பேசியதாகவும் கூறினார்.

இவர்களை கூடிய விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்ப இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதேவேளை தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் வைஜயந்தி எதிரிசிங்க மீட்கப்பட்டவர்கள் தொடர்பாக தெரிவிக்கையில், தாய்லாந்து அதிகாரிகளால் முதலில் அவர்கள் பரிசோதிக்கப்படுவார்கள் என்றும் அங்குள்ள குடிவரவு அதிகாரிகளின் பராமரிப்பில் இவர்கள் இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த செயல்முறைக்கான காலக்கெடு இன்னும் தெளிவாக இல்லை என்றும் கூறிய அவர், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு இது தொடர்பில் இலங்கைக்கு உதவி வருவதாகவும் கூறினார்.

## புதுக்குடியிருப்பில் அகழ்வுப்பணி

**ஓமந்தை விஷேட நிருபர்**

யுத்த காலத்தில் விடுதலை புலிகளால் ஆயுதங்கள் மற்றும் தங்கம் மறைத்து வைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதியிலுள்ள தனியார் காணியில் நேற்று (16) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபனின் மேற்பார்வையில் அகழ்வுப்பணி இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவானின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர், கிராம சேவையாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் இணைந்து அகழ்வுப்பணியை மேற்கொண்டனர்.

06

# கட்சி உயர்பீட இரகசிய வாக்கெடுப்பில் 47 பேருள் 31 பேர் ஐ.ம.சவுக்கு ஆதரவு

### அதனாலேயே சஜித்தை ஆதரிக்க முடிவு செய்தோம்



தலைமைத்துவத்தின் தீர்மானத்துக்கு கட்டுப்படுவதற்கு மக்கள் இணங்கியதாலும், கட்சியின் அரசியல் உயர்பீடத்தில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் 31 வாக்குகள் கிடைத்ததாலுமே, சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தீர்மானித்ததாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வு நேற்று முன்தினம் (15) கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் இடம்பெற்றது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பியும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் சுபைர்தீனும் கைச்சாத்திட்டனர்.

இங்கு உரையாற்றிய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன்,

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தீர்மானித்துள்ளோம். கட்சியின் உயர்பீடத்தில் இது குறித்து இரகசிய வாக்களிப்பு நடைபெற்ற போது கலந்துகொண்ட 47 பேரில் 31 பேர் சஜித்தை ஆதரித்தனர். நாடு பூராகவும் சென்று மக்களிடம் கருத்து கேட்டபோது, கட்சியின் உயர்பீடத்தின் முடிவுக்கு கட்டுப்படுவதாக தெரிவித்தனர். இதனால் தான் சஜித்பிரேமதாசவை ஆதரிக்கிறோம்.

இனவாதமில்லாத, வாக்குறுதிகளை காப்பாற்றும் நேர்மையான அரசியல்வாதி சஜித். அவருக்கு வழங்கப்படும் சன்மானங்களை மக்களுக்கே அன்பளிக்கும் உயரிய சிந்தனையாளர்.

06




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 32ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்

பண்பு இல்லாதவர்கள் உயர்ந்த பதவியில் இருந்தாலும் உயர்ந்தோர் அல்லர்; இழிவான காரியங்களில் ஈடுபடாதவர்கள் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் உயர்ந்தோரேயாவார்கள்.

# தமிழக அரசியல்வாதிகளின் தவறான நிலைப்பாடு!

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவுவது சமீப காலமாக அதிகரித்திருக்கின்றது. இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அண்மைக் காலமாக அதிகளவில் கைது செய்யப்படுகின்றனர். அதேசமயம் இருநாட்டு மீனவர்களுக்கிடையில் ஒருசில மோதல் சம்பவங்களும் நடந்திருக்கின்றன.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் கைது செய்யப்படுகின்ற சம்பவங்களால் தமிழ்நாட்டில் சலசலப்பான சூழலொன்று சமீப காலமாக நிலவுகின்றது. தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர். அதேசமயம் தமிழக அரசியல்வாதிகள் இது தொடர்பாக கண்டனக் குரல் எழுப்பி வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரி தமிழக அரசாங்கம் இந்திய மத்திய அரசுக்கு கடிதங்களையும் அனுப்பி வருகின்றது. தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு தமிழக அரசு கோரி வருகின்றது.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வைத்தே கைது செய்யப்படுகின்றார்கள். இலங்கைக் கடற்படையினர் ஒருபோதுமே இந்தியக் கடற்பரப்புக்குள் பிரவேசித்து தமிழக மீனவர்களைக் கைது செய்வது கிடையாது. தங்களது நாட்டு கடற்பரப்புக்குள் பிரவேசிக்கின்ற வேறுநாட்டவர்களைக் கைது செய்வது இலங்கைக் கடற்படையினரின் கடமையாகும். எனவே இலங்கைக் கடற்படையினர் தங்களது கடமையையே செய்கின்றார்கள்.

ஆகவே தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வதாக தமிழக அரசியல்வாதிகள் கூக்குரலிடுவதில் எதுவித நியாயமும் கிடையாது என்பதே பொதுவான கருத்து ஆகும். இலங்கை மாத்திரமன்றி, உலகின் எந்தவொரு நாடுமே தங்களது நாட்டு எல்லைக்குள் வேறு நாட்டவர்களை சட்டவிரோதமாக அனுமதிப்பது கிடையாது. அதற்கான சட்டவிதிமுறைகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றியே வேறுநாட்டவர்கள் மற்றொரு நாட்டுக்குள் பிரவேசிக்க முடியும்.

எனவே தமிழக மீனவர்கள் சட்டவிரோதமான காரியத்திலேயே ஈடுபடுகின்றார்கள். அவர்கள் தங்களது நாட்டின் கடல் எல்லையைத் தாண்டி மற்றொரு நாட்டின் எல்லைக்குள் சட்டவிரோதமாக ஊடுருவுவது மாத்திரமன்றி, அந்த நாட்டின் வளங்களுக்கு பெரும் சேதங்களையும் ஏற்படுத்தி வருகின்றார்கள்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் தினமும் பலநூற்றுக் கணக்கான தமிழக மீன்பிடிப் படகுகள் பிரவேசித்து மீன்பிடித்து வருவதை வடபகுதி மீனவர்களால் தாராளமாகவே பார்க்க முடிகின்றது. தமிழக மீனவர்கள் வகைதொகையாக வந்து இவ்வாறு மீன்பிடிப்பதனால் வடபகுதி மீனவர்களால் அச்சத்தின் காரணமாக அப்பகுதிக்குச் சென்று மீன்பிடிக்க முடிவதில்லை. அவ்வாறு அங்கு சென்ற வடபகுதி மீனவர்கள் தமிழக மீனவர்களால் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழக மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தியே இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடித்து வருகின்றனர். 'பொட்டம் ரோலிங்' எனப்படும் மடிவலை முறையினாலேயே அவர்கள் மீன்பிடிக்கின்றனர். இந்த மீன்பிடி முறைமையானது இலங்கையில் மாத்திரமன்றி, உலகநாடுகள் பலவற்றில் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இழுவை மடிவலையைப் பயன்படுத்துகின்ற போது, பெரிய மீன்கள் மாத்திரமன்றி சிறுமீன்குஞ்சுகளும் அவ்வலைக்குள் அகப்பட்டுக் கொள்கின்றன. அதாவது ஒரு குறித்த நீர்ப்பகுதியில் உள்ள அத்தனை மீன்களும் மடிவலைக்குள் அகப்பட்டுக் கொள்கின்றன. இந்திய மீனவர்கள் தங்களுக்குத் தேவையான பெரிய மீன்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு, சிறிய மீன் குஞ்சுகளை கடலுக்குள் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

கடலை விட்டு வெளியே வந்ததுமே சிறிய மீன்குஞ்சுகள் இறந்து விடுகின்றன. இறந்து போன மீன்குஞ்சுகளை அவர்கள் கடலுக்குள் வீசி விட்டுச் செல்கின்றனர். சில மீன்களைப் பிடிப்பதற்காக, ஏராளமான மீன்குஞ்சுகளைக் கொன்று விட்டுச் செல்கின்றனர் இந்திய மீனவர்கள்.

இந்திய மீனவர்களின் பொறுப்பற்ற இச்செயல் காரணமாக இலங்கையின் கடல்வளம் வேகமாக அழிந்து செல்வதாக வடபகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மீன்குஞ்சுகள் உட்பட ஒட்டுமொத்த மீன்வளத்தையும் அவர்கள் அழித்து வருகின்றனர் என்பதுதான் உண்மை.

அது ஒருபுறமிருக்க, இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில் பவளப்பாறைகள் நிறைந்து காணப்படுகின்றன. வடபகுதிக் கடற்பரப்பில் மீன்கள் அதிகம் காணப்படுவதற்கு பவளப்பாறைகளும் பிரதான காரணமாகும். கடலுக்கு அடியில் பவளப்பாறைகள் நிறைந்து காணப்படுவதனால், மீன்களின் இனப்பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆனால் இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி முறைகள் காரணமாக பவளப்பாறைகளும் வேகமாக அழிவடைந்து வருவதாக கடல்சார் அறிவியலாளர்கள் கூறுகின்றனர். பவளப்பாறைகள் முற்றாக அழிந்து விடுமானால் எதிர்காலத்தில் வடபகுதிக் கடலில் மீன்வளம் பெருதும் குறைந்து விடும் என்பதுதான் இலங்கை மீனவர்களின் கவலை ஆகும்.

இலங்கையின் கடல்வளம் பாதிக்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. அதேவேளை இலங்கை-இந்திய மீனவர்களுக்கிடையில் விரோதம் தோன்றாத வகையில் இப்பிரச்சினையை அவதானமாகக் கையாள்வதும் அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# சர்வதேச சுகாதார நெருக்கடியாக குரங்கம்மை நோய் அறிவிப்பு!



குரங்கம்மை நோய்த்தொற்றை சர்வதேச சுகாதார நெருக்கடியாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

எம்பொக்ஸ் அல்லது குரங்கம்மை, கொடிய நோய்த்தொற்று வகையைச் சேர்ந்தது. இது முதலில் கொங்கோ நாட்டில் வேகமாகப் பரவியதால் சுமார் 450 நபர்கள் உயிரிழந்தனர்.

தற்போது, இந்த நோய்த்தொற்று மத்திய மற்றும் கிழக்கு ஆபிரிக்காவின் சில பகுதிகளில் பரவி வருகிறது. மேலும் இந்த வைரஸின் புதிய வகை திரிபு (Variant) மக்கள் மத்தியில் பரவும் வேகம் மற்றும் இதனால் அதிகரிக்கும் இறப்பு வீதம் குறித்து விஞ்ஞானிகள் கவலையில் உள்ளனர்.

ஆபிரிக்கா மட்டுமன்றி அதைத் தாண்டியும் இந்நோய் பரவுவதற்கான சாத்தியம் இருப்பது மிகவும் கவலை அளிப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் கூறியுள்ளார்.

"நோய்த்தொற்று பரவுவதைத் தவிர்த்து, உயிர்களைக் காப்பாற்றுவதற்கு உலக நாடுகளின் ஒருங்கிணைந்த செயல்பாடு அவசியம்" என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட 100 பேரில், நால்வர் உயிரிழக்கும் அளவிற்கு இது மிகவும் ஆபத்தானதாக உள்ளது. எம் பொக்ஸ் வைரஸில் கிளேட் 1, கிளேட் 2 (Clade 1 மற்றும் Clade 2) என இரண்டு வகைகள் உள்ளன.

கடந்த 2022ஆம் ஆண்டு, குரங்கம்மை பரவியதால் அறிவிக்கப்பட்ட பொது சுகாதார நெருக்கடியானது, கிளேட் 2 வகை வைரஸால் ஏற்பட்டது. ஆனால் இம்முறை அதைவிட மிகவும் ஆபத்தான கிளேட் 1 வைரஸ் பரவி வருகிறது. இது இதற்கு முன் நோய்த்தொற்று பரவுவதைக் காட்டிலும் 10% வரை அதிக நோயாளிகளின் உயிரிழப்பிற்குக் காரணமாக உள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இந்த வைரஸில் நடந்த மாறுபட்டால் கிளேட் 1பி என்ற புதிய வைரஸ் திரிபு உருவானது. இந்தப் புதிய மாறுபட்ட வைரஸ் 'இன்னும் அதிக ஆபத்தானது'என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து கொங்கோ நாட்டில் சுமார் 13,700க்கும் மேற்பட்ட மக்களுக்கு குரங்கம்மை பாதிப்பு ஏற்பட்டு அதில் குறைந்தது 450 பேர் உயிரிழந்துள்ளனர்.

புருண்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, கென்யா, ருவாண்டா உள்ளிட்ட பிற ஆபிரிக்க நாடுகளில் இந்த நோய்த்தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம், கிளேட் 2 வகை குரங்கம்மை ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகள் உட்பட சுமார் 100 நாடுகளுக்குப் பரவியது. இவ்வகை வைரஸ் பரவியதன் மூலம் 87,000க்கும் மேற்பட்ட நோய் பாதிப்புகள் மற்றும் 140 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்று உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன. இதைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், தற்போது பரவி வரும் நோய்த் தொற்று கட்டுப்பாட்டை மீறிச் செல்லக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

முதலில் காய்ச்சல் தோன்றும். அது நின்றவுடன் தடிப்புகள் தோன்றலாம். பெரும்பாலும், முகத்தில் இது தொடங்கி, பின்னர் உடலின் மற்ற பகுதிகளுக்குப் பரவும். பொதுவாக உள்ளங்கைகள், பாதங்கள் வரை பரவும்.

அதிகப்படியான அரிப்பு அல்லது வலியுடன் கூடிய இந்த தடிப்புகள், பல்வேறு நிலைகளைக் கடந்து, இறுதியாக பொருக்குகளாக மாறும். அவை விழுந்த பின்னர் அவை இருந்த இடத்தில் வடுக்கள் தோன்றும்.

இந்தத் தொற்று பொதுவாக 14 முதல் 21 நாட்கள் வரை நீடித்தபின் தானே மறையும். தீவிரமான தொற்றுகளில், காயங்கள் உடல் முழுதும் தோன்றும். குறிப்பாக, வாய், கண்கள், மற்றும் பிறப்புறுப்புகளையும் அவை தாக்கலாம். குரங்கம்மை நோய்த்தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிப் பழகினால் இது பரவும். அதாவது, இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் உடலுறவு கொள்வது, தோலோடு தோல் உரசுவது, அல்லது அந்த நபருடன் நெருக்கமாகப் பேசுவது, சுவாசிப்பது ஆகிய செயல்களின் மூலம் இந்தத் தொற்று பரவும்.

தோலில் இருக்கும் பிளவுகள், சுவாசக்குழாய் அல்லது கண்கள், மூக்கு, வாய் வழியாக இந்த வைரஸ் உடலில் நுழையும். இந்த வைரஸ் படிந்திருக்கும் படுக்கை, ஆடைகள், துண்டுகள் போன்ற பொருட்களைத் தொடுவதன் மூலமும் இது பரவுகிறது.

இந்த வைரஸ் பரவும் மற்றோரு வழி: குரங்குகள், எலிகள், அணில் போன்ற இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் நெருங்கிப் பழகுவது. 2022இல் இந்தத் தொற்று உலகளாவிய அளவில் பரவியபோது, அது பெரும்பாலும் பாலியல் உறவு மூலம் பரவியது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த தொற்றுநோய்ப் பரவல் பாலியல் தொடர்பு மூலம் உண்டாகியிருக்கிறது. ஆனால் இது மற்ற சமூகங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது.

# எடின்பரோ கோமகன் சர்வதேச விருது பெற்ற கிழக்கு மாகாண இளைஞர்கள்





சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய இளைஞர் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரித்தானிய 'எடின்பரோ கோமகன் சர்வதேச விருது' வழங்கல் விழாவில் கிழக்கு மாகாணத்தில் ஜீனியஸ் 7 விருதுப் பிரிவு(G7 Award Unit) மற்றும் கோல்டன் அசிவர்ஸ் (Golden Achievers Award unit)விருதுப் பிரிவு ஊடாக சுமார் 63 இளைஞர், யுவதிகள் வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான விருது வழங்கும் விழா மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதான கேட்போர் கூடத்தில்(13) இடம் பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளரும், இலங்கை சிரேஷ்ட நிருவாக அதிகாரியுமான ஏ.எல்.எம் சலீம், மையோன் குறூப் கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான ரிஸ்லி முஸ்தபா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர், மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், மாவட்ட மற்றும் தேசிய சம்மேளத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# தன்னுயிரை துச்சமாக மதித்து மக்களைக் காப்பாற்றிய பெண்!



### வயநாடு நிலச்சரிவில் பாதிப்புற்ற மக்களுக்கு உதவிய சபீனாவுக்கு தமிழக அரசு விருது வழங்கி கௌரவிப்பு

மழைக்கவசம் மட்டுமே அணிந்திருக்கிறார். கையில் முதலுதவி உபகரணங்கள் அடங்கிய ஒரு பையை இறுகப் பற்றியுள்ளார். கீழே ஆற்றில் வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த ஆற்றை ஜிப்லைன் வாயிலாகக் கடந்து சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டும்.

இந்தியாவின் வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்டபோது சூரல்மலையில் இருந்து இப்படி ஜிப்லைன் மூலமாக ஒரு தாதி முண்டகைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்து காப்பாற்றியுள்ளார். அவர் நீலகிரி மாவட்டம் கூடலூரைச் சேர்ந்த சபீனா.

ஜிப்லைன் வாயிலாகச் செல்வது அவருக்கு இதுவே முதன்முறை. மழை பெய்துகொண்டிருக்கிறது, மீண்டும் நிலச்சரிவுக்கான எச்சரிக்கை. ஆனால் அவர் எதையும் பொருட்படுத்தவில்லை.

"பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம்தான் இருந்தது. பயம் இல்லை"என அவர் கூறினார்.அவருடைய பணியைப் பாராட்டி தமிழ்நாடு அரசு 'கல்பனா சாவ்லா விருது' வழங்கி சுதந்திர தின விழாவில் கௌரவித்தது.

தாதி சபீனா, ஷிஹாப் தங்கல் மனிதநேய மையம் எனும் தொண்டு நிறுவனத்தில் மூன்று ஆண்டுகளாக தாதியாகப் பணிபுரிந்து வருகிறார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டு படுக்கையிலேயே முடங்கிக் கிடப்பவர்களின் வசிப்பிடத்திற்கே சென்று சிகிச்சை அளிக்கும் பணியை அவர் செய்து வருகிறார்.

ஜூலை 29 அன்று கேரளாவின் வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், சூரல்மலை, முண்டகை எனும் இரண்டு பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இரு கிராமங்களையும் இணைக்கும் பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இது மீட்புப் பணிகளில் குறிப்பிடத்தக்க தடங்கல்களை ஏற்படுத்தியது.

குறிப்பாக, சூரல்மலையில் இருந்து முண்டகைக்கு அந்தப் பாலம் வழியாகத்தான் செல்ல வேண்டும். எனவே, முண்டகைக்குச் சென்று காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தாமதமானது. எனவே, இராணுவம், தேசியப் பேரிடர் மீட்புப்படை உள்ளிட்ட மீட்புக் குழுவினர் சூரல்மலையில் இருந்து ஜிப்லைன் அமைத்து அதன் வாயிலாக முண்டகைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை மீட்க வேண்டியிருந்தது.

இப்படி ஜிப்லைன் வாயிலாக முண்டகைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்திருக்கிறார் சபீனா.

சபீனாவின் குழுவில் ஆண் செவிலியர்கள் இல்லை. 'பெண் செவிலியர்கள் ரிஸ்க் எடுக்க வேண்டாம் என மீட்புக்குழுவினர் கூறியதாக சபீனா தெரிவிக்கிறார்.

"ஆனால், நான் ஜிப்லைன் வாயிலாகச் சென்று முதலுதவி அளிக்க முன்வந்தேன். ஜிப்லைன் மூலமாக ஆற்றைக் கடந்து, முண்டகைக்குச் சென்று சுமார் 3035 பேருக்கு முதலுதவி அளித்தேன்" என்கிறார் சபீனா.

சூரல்மலை முண்டகை இடையே மீட்புப் பணிகளுக்காக கடந்த ஆகஸ்ட் 1 அன்று இந்திய இராணுவத்தின், 'மெட்ராஸ் சாப்பர்ஸ்' எனும் மெட்ராஸ் இன்ஜினியர் குழு குறுகிய நேரத்தில் 'பெய்லி பாலம்' எனப்படும் தற்காலிக இரும்புப் பாலத்தைக் கட்டினர்.

அப்பிரிவின் மேஜர் சீதா ஷெல்கே எனும் அதிகாரியின் கண்காணிப்பில் தான் அப்பாலம் 31 மணிநேரத்தில் கட்டி முடிக்கப்பட்டதாகத் தகவல் வெளியானது.

ஆனால், அப்பாலம் கட்டப்படுவதற்கு முன்பு வரை மீட்கப்படும் சடலங்கள், காயமடைந்தவர்கள் என எல்லோரையும் ஜிப்லைன் வாயிலாகத்தான் கட்டி மீட்புக் குழுவினர் அனுப்பினர்.

# மாமிச உணவே உண்ணாத மக்கள் வாழ்கின்ற அழகிய கிராமம்!

மாமிச உணவே சாப்பிடாத நபர்களைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் மாமிச உணவை சாப்பிடாத ஒரு கிராமமே உள்ளது என்றால் நம்ப முடிகிறதா?

இந்தியாவின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கிராம மக்கள் அவர்களது முன்னோர் காலம் முதலே சைவ உணவையே உண்டு வருகின்றனர். அசைவ உணவுகளை அவர்கள் சாப்பிடுவதே இல்லையாம்.

நீலகிரி என்றாலே முதலில் நினைவுக்கு வருவது அதன் குளுகுளு காலநிலைதான். எங்கு பார்த்தாலும் பச்சைப் போர்வை போர்த்தியதுபோல காண்போரின் கண்களைக் குளிர வைக்கும் இயற்கை அமைப்பைக் கொண்ட ஓர் அழகிய மாவட்டம்.

தேயிலை, மலைக் காய்கறிகள் விவசாயத்திலும், சுற்றுலாத் துறையிலும் முக்கிய பங்காற்றி வருகிறது இம்மாவட்டம். அதிக அளவில் பழங்குடியினர் வசித்து வரும் மாவட்டமாகவும் நீலகிரி உள்ளது. இம்மாவட்டத்தில் இன்றளவும் பழங்குடி மக்கள் தங்களது முன்னோரின் பாரம்பரிய பழக்கவழக்கங்களையும், விநோதமான வழிபாட்டு நடைமுறைகளையுமே பின்பற்றி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டம், கக்குச்சி பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியில் உள்ளது தீனட்டி கிராமம். இந்த கிராமம் பசுமையான மலைகள், குளுகுளு காலநிலை, தேயிலைத் தோட்டங்கள் என அழகு நிறைந்த அமைதியான கிராமமாக உள்ளது. இந்த கிராமத்தில் சைவ உணவை மட்டுமே கிராம மக்கள் மட்டுமே காலம் காலமாக சாப்பிட்டு வருகின்றனர். அசைவ உணவுகளை முற்றிலும் புறக்கணித்து வருவதாகவும் கூறுகின்றனர். பழங்காலம் முதல் இன்று வரை இந்த கிராமத்தில் உள்ள இளைஞர்களும் சைவ உணவு முறையை மட்டுமே கடைப்பிடித்து வருகிறார்கள்.

## சுதந்திரமடைந்து 78 ஆண்டுகள்;

# இந்தியாவும் பாகிஸ்தானும் அடைந்த முன்னேற்றங்கள்!

இந்தியா கடந்த 15 ஆம் திகதி தனது 78 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. அதற்கு முந்திய தினமான 14 ஆம் திகதி பாகிஸ்தான் தனது 78 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது.

இவ்விரு நாடுகளும் சுதந்திரத்தின் போது ஒரே இடத்தில் தங்கள் பயணத்தைத் தொடங்கிய சூழலில், இப்போது இரு நாடுகளும் எதிரிநாடுகளாக உள்ளன. இருநாடுகளின் பொருளாதாரம், பாதுகாப்புப் பலம் என்பனவும் வேறுபட்டனவாக உள்ளன.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் 1947 ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவத்தில் இருந்து சுதந்திரத்தைப் பெற்றன. இரு நாடுகளும் சுதந்திரம் பெற்று 78 ஆண்டுகள் ஆகிவிட்டன.

பிரிட்டிஷ் ஆட்சியில் மிகப் பெரிய சுரண்டல்கள் நடந்த நிலையில், நீண்ட போராட்டத்திற்குப் பிறகு சுதந்திரம் கிடைத்தது.

1947 ஆம் ஆண்டு இரு நாடுகளும் ஒரே இடத்தில் இருந்துதான் தங்கள் பயணங்களை ஆரம்பித்தன. ஆனால், இன்று 78 ஆண்டுகள் கழித்து ஏறக்குறைய அனைத்துத் துறைகளிலும் இந்தியா முன்னேறி இருக்கிறது. பாகிஸ்தான் குறைவான வளர்ச்சியையே அடைந்துள்ளது.

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகவும் திகழ்கிறது.

ஆனால் மறுபுறத்தில் பாகிஸ்தானின் நிலைமை அமைதியாக இல்லை. அரசியல் அமைதியின்மை, ஏகப்பட்ட இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளால் பாகிஸ்தான் நாடு பல துறைகளில் திணறியே வருகிறது. அரசியலைப் பொறுத்தவரை பாகிஸ்தானில் அமைதியின்மை இல்லையென்பதே உண்மை.

இப்போது 78 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், ஒரே இடத்தில் இருந்து பயணத்தைத் தொடங்கிய இந்த இரு நாடுகள் இப்போது எப்படி இருக்கின்றன என்பதை இங்கு ஆராய்வது அவசியம்.

பொருளாதார நிலையைப் பொறுத்தவரை இந்தியா $3.937 ட்ரில்லியனுடன் உலகின் 5 ஆவது பெரிய பொருளாதார பலம்மிக்க நாடாக உள்ளது. இந்தியா விரைவில் ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளை முந்திக் கொண்டு மூன்றாவது பெரிய நாடாக விளங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இந்தியாவின் ஜி.டி.பி 4 ட்ரில்லியனைத் தொடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா தற்போது 6.57 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது.

மறுபுறம் பாகிஸ்தான் 374,90 பில்லியன் டொலர்களுடன், உலகின் 46 ஆவது பெரிய பொருளாதார நாடாக மட்டுமே இருக்கிறது. பாகிஸ்தானின் வளர்ச்சி வெறும் 2.38% ஆக மட்டுமே இருக்கிறது.

இந்தியாவில் தனிநபர் வருமானம் எனப் பார்க்கும் போது 2023-24 ஆம் நிதியாண்டில் அது ரூபா 2.12 இலட்சமாக உள்ளதாகப் பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அதாவது அமெரிக்க டொலர் மதிப்பில் அது $2,500 ஆக இருக்கிறது.

மறுபுறம் பாகிஸ்தானின் தனிநபர் வருமானம் $1,680ஆக மட்டுமே இருக்கிறது.

உட்கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் இந்தியா அசுர பாய்ச்சலை அடைந்து இருக்கிறது எனச் சொல்லலாம். வந்தே பாரத், எக்ஸ்பிரஸ்வேஸ், கிரீன்ஃபீல்ட் காரிடர்கள், பாரத்மாலா திட்டங்கள் உள்ளிட்டவை இந்தியாவின் சமீபத்திய சாதனைகள் ஆகும். மேலும், இந்தியாவில் இப்போது சென்னை, பெங்களூர் உட்பட குறைந்தது 15 நகரங்களில் மெட்ரோ ரயில் சேவை இருக்கிறது.

இது தவிர 'வந்தே பாரத்' ரயில் திட்டங்களும் தனியாக நடந்து வருகின்றன.

பாகிஸ்தான் மிகவும் பின்தங்கி இருப்பது இந்த உள்கட்டமைப்பில்தான். அங்கே இப்போது வரை ஒரேயொரு நகரில் மட்டுமே மெட்ரோ இருக்கிறது. அங்கு நிலவும் அரசியல் குழப்பங்களால் சமீப காலங்களில் பெரிய திட்டங்கள் எதையும் அந்நாட்டு அரசால் செய்ய முடிவதில்லை.









அந்நிய செலாவணியைப் பொறுத்தவரை 1960 களில், இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 0.67 பில்லியன் டொலராக இருந்தது. இப்போது 2024 இல் அது 674.919 பில்லியன் டொலராக உள்ளது.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை 1960களில், அந்நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு $032 ஆக இருந்தது. 2024 இல் அதன் கையிருப்பு 8.21 பில்லியன் டொலராக மட்டுமே உள்ளது. பணவீக்கம் இந்தியாவில் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. ஆனால், பாகிஸ்தானில் அது உச்சத்திற்கே சென்றுவிட்டது.

பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை இந்தியா பட்ஜெட்டில் சுமார் 12.9% தொகையை இராணுவத்திற்கு ஒதுக்குகிறது. அதாவது 6.219 ட்ரில்லியன் ரூபாயை இராணுவத்திற்கு ஒதுக்குகிறது இந்தியா.

பாகிஸ்தான் ஆண்டுக்கு ரூ.2,122 பில்லியனை இராணுவத்திற்கு ஒதுக்குகிறது. கல்வியறிவு வீதம் இந்தியாவில் இப்போது 74% ஆக இருக்கிறது. ஆண்களில் 82.4% பேரும் பெண்களில் 65.8% பேரும் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர்.

பாகிஸ்தானில் கல்வியறிவு 58%ஆக மட்டுமே இருக்கிறது. அங்கே ஆண்கள் 69.3% மற்றும் பெண்கள் 46.5% பேர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர்.

# காரைதீவில் கல்விச் சாதனையாளர் 100 பேர் பாராட்டிக் கௌரவிப்பு

காரைதீவில் கல்விச் சாதனையாளர்கள் 100 பேர் தங்கப்பதக்கம் அணிவித்து, பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இக்கௌரவிப்பு விழா, சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜை, அன்னதானம் ஆகிய நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. அன்றைய தினம் மாலை இந்நிகழ்வுகள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் சித்தானைக்குட்டி கலையரங்கில் நடைபெற்றன.



சிறப்புரையை சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா வழங்கினார்.

இவ்விழாவில் கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், க.பொ.த சா.தரப் பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற மாணவர்கள், மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர்கள் என 100 மாணவர்கள் சித்தானைக்குட்டி கலையரங்கத்தில் பதக்கம் அணிவித்து பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

விழாவில் அதிதிகளாக கலந்து சிறப்பித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா, மன்னார் மாவட்ட பிரதம பொறியியலாளர் ரி. சுரேந்திரகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் அதிபர்கள், பிரதி அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆலய பரிபாலன சபை செயலாளர் இ.விஜயரெத்தினம், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோர் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.





காரைதீவு குறூப் நிருபர்...

# குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவது மிகவும் அவசியம்

## மருத்துவர் கூறும் அறிவுரை

குழந்தைகளின் தேக ஆரோக்கியத்திற்குத் தேவையான தாய்ப்பாலைக் கொடுப்பதைத் தவிர்த்து ஏனைய பால்மா வகைகளை கொடுத்திடும் செயல் தாம் பெற்ற குழந்தைக்கு விஷத்தினை கொடுத்திடும் செயற்பாட்டிற்கு சமம்.



இவ்வாறு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி டொக்டர் சனூஸ் காரியப்பர் வைத்தியசாலைக்கு வெளி நோயாளர் சிகிச்சை பிரிவிற்கு வருகை தந்திருந்த கர்ப்பிணித் தாய்மார் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் தாய்ப்பால் தினம் கொண்டாடப்படுகின்ற தினத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு தாய் பாலூட்டல் மூலம் 42 சதவீதமான மார்பகப் புற்று நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். ஒரு தாயினால் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் அந்தக் குழந்தைக்கு மட்டும் நன்மை கிட்டுவதில்லை தாய்க்கும் பல்வேறு வழிகளில் நன்மை கிடைக்கின்றது.

இவ்வாறு தாய்ப்பாலூட்டுவதால் வளரும் குழந்தை எதிர்காலத்தில் பூரண ஆரோக்கியமான பிரஜையாக தோற்றம் பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# அக்கரைப்பற்று ஸகாத் நிதியம், உலமா சபையினர் சந்திப்பு

அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுமார் இரண்டு தசாப்த காலத்துக்கும் மேலாக ஏழைகளின் தேவையறிந்து ஸகாத் பணியை மேற்கொண்டு வரும் அக்கரைப்பற்று ஸகாத் நிதியம் மற்றும் இப்பிரதேச மக்களின் வழிகாட்டிகளாக இருக்கும் மௌலவிமார்களை கொண்ட ஜம்மியதுல் உலமா சபையின் அக்கரைப்பற்று கிளையின் நிறைவேற்றுக்குழு ஆகியவற்றுக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு கடந்த வாரம் அக்கரைப்பற்று உலமா சபை காரியாலயத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, உலமா சபை அக்கரைப்பற்று கிளைத் தலைவர் கலாநிதி அல்ஹாபீழ் எம்.ஐ.சித்தீக் (அஸ்ஹரி), தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷேக் ஏ.எம். அப்துல் றாசீக், அல்ஹாபீழ் மௌலவி மன்சூர் (பலாஹி) மற்றும் உலமாக்களும், ஸகாத் நிதியம் சார்பில் அதன் உபதலைவர் அஷ்ஷேக் எஸ்.எம். அபுல் ஹாசீம் (அஸ்ஹரி), செயலாளர் அஷ்ஷேக் எம்.ஐ. சாஹீர் (இஸ்லாஹி), ஆசிரியர் எகீன், ஆசிரியர் றியாஸ் உட்பட ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இப்பிரதேசத்தில் வறிய நிலையில் இருக்கும் மக்களுக்கு பல தொண்டு அமைப்புகள் உதவி செய்து வந்தாலும், பொதுமக்களின் நாளாந்த தேவைகள் குறைந்தபாடாக இல்லை. அதனடிப்படையில் ஏழை எளியவர்களின் உண்மை நிலைமையை அறிந்து அக்கரைப்பற்று ஸகாத் நிதியமானது பல்வேறு உதவிகளையும் தேவைக்கேற்ப அவர்களுக்கு செய்து வருகின்றது.



இருந்தபோதிலும் மக்களின் தேவைகள் அதிகமாகின்ற வேளையில் ஸகாத் கொடுப்பவர்களின் அளவை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இப்பிரதேசத்தில் உள்ள சமூக நிறுவனங்கள், இளைஞர் அமைப்புக்களை சந்தித்து இந்த செயற்பாட்டை ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காக ஜம்மியதுல் உலமா சபையின் அக்கரைப்பற்று கிளை பாடுபட்டு வருகின்றது.

முஸ்லிம் சமூகத்தில் ஸகாத்தை கூட்டாக சேர்ந்து அதனை உரியவர்களுக்கு கொண்டு போய் சேர்க்க வேண்டியது கூட்டுப்பொறுப்பாகும். ஸகாத்தை கூட்டாக வழங்கி ஏழைகளின் துயர் துடைக்கும் இந்த பொறுப்பை தற்போது சுமந்து இருக்கும் ஸகாத் நிதியத்தோடு அக்கரைப்பற்று உலமா சபையும் ஒன்றாக சேர்ந்துள்ளது. இனிவரும் காலங்களில் நாம் இச்சமூகத்தின் நன்மை கருதி அனைவரும் ஒன்றாக இணைந்து பயணிப்போம் என்று உலமா சபை அக்கரைப்பற்று கிளைத்தலைவர் கலாநிதி அல்ஹாபீழ் எம்.ஐ.சித்தீக் (அஸ்ஹரி) தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஸகாத் நிதியம் சுமார் இருபது வருடங்களுக்கும் மேலாக இப்பிரதேசத்தில் பல சவால்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றது.

மேலும், இந்நிதியத்திற்கு ஸகாத் வழங்குவோரை அடையாளம் கண்டு அவர்களை சந்தித்து அவர்களிடமிருந்து ஸகாத்தை பெற்று இந்நிதியத்திற்கு வழங்கி வறிய மக்களின் கஷ்டங்களை போக்குவதற்காக இப்பிரதேசத்தில் உள்ள சகல தரப்பினரும் ஸகாத் நிதியத்தோடு இணைந்து செயற்பட வேண்டும் என ஸகாத் நிதியத்தின் உபதலைவர் அஷ்ஷேக் எஸ்.எம்.அபுல் ஹாசீம் கேட்டுக் கொண்டார்.

றிஸ்வான் சாலிஹு...
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

## ஜனாதிபதி ரணிலுக்கு...

தினேஷ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம்.அலி சப்ரி, புதிய கூட்டமைப்பு சுசில் பிரேமஜயந்த, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி டக்ளஸ் தேவானந்தா, ஐக்கிய மக்கள் கட்சி ஹேமத்பிரிய கவிரத்ன, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அனுர பிரியதர்ஷன யாப்பா, ஐக்கிய தேசியக் கட்சி வஜிர அபேவர்தன, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசிய காங்கிரஸ் – ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஐக்கிய மக்கள் சக்தி ராஜித சேனாரத்ன, ஏ. எச். எம்.பௌசி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி அசங்க நவரத்ன, நவ லங்கா சுதந்திரக் கட்சி குமார வெல்கம, ஐக்கிய மக்கள் கட்சி – அ.அரவிந்தகுமார், முற்போக்குத் தமிழர் கழகம் எஸ். வியாழேந்திரன், சுதந்திர மக்கள் சபைக் கட்சி உதயன கிரிந்திகொட, தேசிய சுதந்திர முன்னணி மொஹமட் முஸம்மில், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் வடிவேல் சுரேஷ், ஜனநாயக ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் வேலுகுமார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எஸ். எம். எம் முஷாரப், ஜனநாயக தேசிய இயக்கம் சதுர சேனாரத்ன, தேசிய ஐக்கிய முன்னணி அசாத் சாலி, இலங்கை முற்போக்கு முன்னணி சம்பிக்க லோவ், ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பு எம். ராஜநாதன் பிரபாகரன், புதிய ஜனநாயக முன்னணி ஷியாமலா பெரேரா, தேசப்பற்றுள்ள மக்கள் படையணி சுகத் சேவாபத்திரன, ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி அன்வர் எம். முஸ்தபா, லக்ஜன பெரமுன சிந்தக வீரகோன், ஐக்கிய மக்கள் முன்னணி சிறிமசிறி ஹப்புஆராச்சி, தேசிய மக்கள் முன்னணி கலாநிதி ஏ. எம் ஜயரத்ன, நவஜனசெத பெரமுன டபிள்யூ. எம் காமினி விஜேநாயக்க, மவ்பிம அபிவிருத்தி முன்னணி நிஷாம் மொஹமட், ஐக்கிய சமூக ஜனநாயக கட்சி கே. பி. ஜயமினி ஜினதாச ஆகியோர் 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

## எதிர்காலத்தை கட்டியெழுப்புவதே...

சவாலை ஏற்றுக்கொண்டவர்களே இதில் இணைந்துள்ளனர் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்ல வோர்ட்ஸ் ஏட்ஜ் ஹோட்டலில் நேற்று (16) முற்பகல் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை குறிப்பிட்டார்.

தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள் நாட்டை ஆட்சி செய்வதற்கு தகுதியானவர் என்று கூறி தனக்கு வாக்களிக்குமாறு கோருகின்ற அதேவேளை, இந்த ஜனாதிபதி தேர்தலில் அரசியல்வாதிகளின் எதிர்காலத்தை கருத்தில் கொள்ளாது, மக்கள் தங்களின் எதிர்காலத்தை பற்றி சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அன்று நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய அனுமதித்திருந்தால் இன்று ஜனாதிபதி தேர்தலை நடத்த சந்தர்ப்பம் கிடைத்திருக்காது என தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் வகையில் இந்த வருடம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது,

'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கை அரசியல் கட்சியொன்றை உருவாக்குவதற்காக மாத்திரமன்றி அனைவரையும் ஒன்றிணைத்து மக்கள் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பவே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

'முடியாது' என்று ஓடிப்போகாமல் 'முடியும்' என்று நிற்கக் கூடியவர்களே இந்த உடன்பாட்டில் இணைந்துள்ளனர். நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பு சீர்குலைந்து, நாடு மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்ட போது, சில அரசியல் தலைவர்கள் ஓடிவிட்டனர். நான் இந்த நாட்டை பொறுப்பேற்ற போது எனக்கு கட்சியெதுவும் இருக்கவில்லை. இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் இணைந்துகொண்டனர். அன்று முடியும் என்று முன்வந்ததால் இன்று ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகிறது.

அன்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்காது என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஏனைய வேட்பாளர்களும் தங்களுக்கு வாக்களிக்குமாறு கோருகின்றனர். நாட்டை ஆள மிகவும் பொருத்தமானவர் தான் என்றும் கூறுகிறார்கள். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை. மக்கள் அனைவரும் தங்களினதும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நாம் அனைவரும் இலங்கையுடன் இணைந்து முன்னேறுவோம். வங்குரோத்தான மற்றும் வரிசை யுகம் காணப்பட்ட ஒரு நாட்டை தான் பொறுப்பேற்றோம். நாடு முழுவதும் எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள், உணவு, மருந்துக்கான வரிசைகள் இருந்தன. எங்களிடம் பணம் இருக்கவில்லை. ஒரு மில்லியன் டொலர்கள் கூட பணம் இருக்கவில்லை. இந்த வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவருவதற்கு கடினமான தீர்மானங்களை எடுக்க நேரிட்டது. அவை விருப்பத்துடன் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அல்ல.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாட்டை நாம் பொறுப்பேற்று இன்று, பணவீக்கத்தை கட்டுப்படுத்தி, அந்நிய செலாவணிக் கையிருப்பை அதிகரித்துள்ளோம். இந்த வேலைத்திட்டத்தை நாம் மக்களுடன் இணைந்தே செயல்படுத்தினோம்.

'அரசாங்கம் வெளியேற வேண்டும், இதற்கு தீர்வு காண முடியாது' என்று பலர் மேடைகளில் கூச்சலிட்டனர். ஜெனிவா சென்றனர். ஆனால் சமுர்த்தி நன்மையை விட மூன்று மடங்கு மக்களுக்கு 'அஸ்வெசும' நிவாரணம் வழங்கினோம். நாடு பெரும் நிதி நெருக்கடியை சந்தித்திருந்த தருணத்திலேயே இப்பணிகளை நாம் செய்தோம்.

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 02 மாதங்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது. 'உறுமய' திட்டத்தின் ஊடாக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்படுகின்றது. அரச ஊழியர் சம்பளம் 10,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் மேலும் சம்பளம் அதிகரிக்கப்படும். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இவற்றை இடைநடுவில் நிறுத்துவதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

18 நாடுகள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட 21 நிறுவனங்களுடன் நாம் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்தோம். இந்த நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அந்த இணக்கப்பாட்டின் பிரகாரம் நாம் செயற்பட வேண்டும்.

இதில் திருத்தம் செய்ய வேண்டும் என்றால் மீண்டும் இந்த 21 நாடுகளுடனும் நிறுவனங்களுடனும் பேச்சு நடத்த வேண்டும். இந்த பணிகளை முடிக்க எங்களுக்கு 02 வருடங்கள் தேவைப்பட்டது. திருத்தியமைக்க இன்னும் 02 வருடங்கள் ஆகும். ஆனால் இந்த சலுகைகள் இல்லாமல் இன்னும் ஒரு வருடத்திற்கு நாம் ஒரு நாடாக தொடரந்து பயணிக்க முடியாது. எனவே இந்த செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்து நம்மிடம் உள்ள பணத்தை இழக்க வேண்டுமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

புதிய சக்தியாக நாங்கள் முன் வந்துள்ளோம். நாட்டின் அரசியல் கட்சிகள் வீழ்ச்சிகண்ட போது நாங்கள் ஒன்று சேர்ந்தோம். இன்னும் 5 ஆண்டுகளுக்கு அந்த வேலைத் திட்டத்தை தொடர வேண்டும். அத்துடன் புதியதொரு தலைமையும் இந்நாட்டில் உருவாகியது. அண்மைக் காலத்தில் இவ்வாறானதொரு அரசாங்கத்தை நாம் பார்த்ததில்லை.

இந்த அணியுடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பவே நாம் விரும்புகிறோம். கிராமத்தை அபிவிருத்தி செய்து இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து முன்னேறக்கூடிய இலங்கையை உருவாக்க வேண்டும்.

'இயலும் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தின் மூலம் சிறந்த இலங்கையை உருவாக்க முன்னோக்கி செல்ல எம்முடன் இணையுமாறு நான் அனைவரையும் அழைக்கிறேன்.'' என்றார்.

## அலி சாஹிர் மௌலானா...

விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க இணைந்து கொண்டார்.

அலிசாஹிர் மௌலானா உள்ளிட்ட குழுவினர் நேற்று (16) கொழும்பு பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்துக்கு வருகை தந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உத்தியோகபூர்வமாக இதனை அறிவித்தனர். அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, எஸ்.எம்.எம். முஷாரப், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணாயக்கார ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நாகைKKS கப்பல் சேவை...

நேற்று காங்கேசன்துறையை வந்தடைந்தனர். கப்பல் போக்குவரத்தை புதுச்சேரி மாநில உட்துறை அமைச்சர் நமசிவாயம், நாகபட்டினம் மக்களவை உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் ஆகியோர் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தனர். www.sailindsri.com என்ற இணையத்தள முகவரியில் முன்பதிவு செய்த இலங்கை தமிழர்கள் 5 பேர் உட்பட 44 பயணிகள் முதல் பயணமாக கப்பலில் வந்தனர். சிவகங்கை கப்பல் நேற்றுக் காலை 10 மணிக்கு புறப்படுவதாக இருந்தது. சிறிது காலதாமதம் ஏற்பட்டதால் பிற்பகல் 12.15 மணிக்கு பிறகு புறப்பட்டது. காங்கேசன்துறைக்கு மாலை வந்தடைந்தது. நாகபட்டினத்திலிருந்து வெள்ளிக்கிழமை காலை புறப்பட்ட பயணிகள் கப்பல் காங்கேசன்துறைக்கு மாலையில் சென்றடையும். மறுமார்க்கமாக (சனிக்கிழமை) இன்று காலை 10 மணிக்கு இலங்கை காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு மதியம் 02 மணிக்கு நாகை துறைமுகம் வந்தடையும்.

பின்னர், நாளை ஞாயிற்றுக்கிழமை) காலை 08 மணிக்கு நாகை துறைமுகத்திலிருந்து புறப்படும் கப்பல் காங்கேசன்துறைக்கு மதியம் 12 மணிக்கும், அதேநாள், மதியம் 02 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு மாலை 06 மணிக்கு நாகபட்டினம் துறைமுகத்துக்கு கப்பல் சென்றடையும். இந்த சிவகங்கை கப்பலில் 123 சாதாரண இருக்கைகள், 27 பிரீமியம் இருக்கைகள் என மொத்தம் 150 இருக்கைகள் உள்ளன. இந்திய ரூபாவில் ஒருவழி பயணச்சீட்டு ஜிஎஸ்டி வரியுடன் சாதாரண இருக்கைக்கு ரூ.5,000, பிரீமியம் இருக்கைக்கு ரூ.7,500 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 25 கிலோ எடை கொண்ட உடைமைகள் மட்டுமே எடுத்து செல்ல பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

பயணிகளுக்கு கப்பலில் சாம்பார் சாதம், தயிர் சாதம், நூடுல்ஸ் உள்ளிட்ட துரித உணவுகளை கட்டணத்துடன் பெற்றுக்கொள்ள உணவக வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பயணிகள் சிரம்மின்றி பயணிக்க அனைத்து வகையான நடவடிக்கைகளும் செய்யப்பட்டுள்ளது. பல மாதங்களுக்கு பிறகு மீண்டும் நாகைஇலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது அப்பகுதி மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

## கனடாவில் சிலை அமைப்புக்கு...

நடவடிக்கை கனடா மற்றும் இலங்கையில் உள்ள அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும் புண்படுத்துவதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். இலங்கையில் இனப்படுகொலை என்று கூறப்படுவது, தீங்கிழைக்கும் தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட புனையப்பட்டது மற்றும் தேசிய அல்லது சர்வதேச அளவில் எந்தவொரு பொறுப்பான அதிகாரியாலும் நிரூபிக்கப்படவில்லை. இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதார நெருக்கடி நிலவிய போதிலும் மோதல் முடிவுக்கு வந்ததை தொடர்ந்து நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்குமான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. இலங்கை மற்றும் கனடா உட்பட ஜனநாயக நாடுகளால் ஏற்றுக்கொள்ள முடியாத அவநம்பிக்கை. இதனால் இருதரப்பு உறவுகளில் ஏற்படும் பாதிப்பை உணர்ந்து இந்த நினைவுத்தூபியை நிர்மாணிப்பதை தடுக்க கனேடிய அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவும், மேலும் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் வெளியுறவு அமைச்சர் கேட்டுக் கொண்டார் .

## ஜனாதிபதி ரணில் பங்கேற்கும்...

ஒன்றிணைந்த குழுக்கள் உட்பட இம்முறை ஜனாதிபதிக்கு ஆதரவான கட்சிகள் மற்றும் குழுக்களின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவின் முதலாவது பேரணி நேற்று (16) பிற்பகல் 3.00 மணிக்கு குருநாகல் சத்தியவாதி அரங்கில் நடைபெற்றது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான குழுக்கள் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் முதலாவது பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அநுராதபுரம் கடபனஹ பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. அநுராதபுரம் ஜயஸ்ரீ மஹா போதிக்கு அருகில் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நேற்று (16) காலை அவர் மத வழிபாட்டில் ஈடுபட்டார். இதன்போது 300 பிக்குகளுக்கு தானம் வழங்கி சமய வழிபாடுகளை மேற்கொண்டார். அதனையடுத்து கண்டி தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளின் பின்னர் கண்டியில் மகா நாயக்க தேரர்களின் ஆசியையும் பெற்றுக்கொண்டார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் ஆரம்பமான பொதுக்கூட்டம் இன்று (17) பிற்பகல் 2.30 மணிக்கு தங்காலையில் நடைபெறவுள்ளது. மாலை 3.30 மற்றும் 4.30 மணிக்கு மாத்தறை மற்றும் காலி ஆகிய இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

## மக்கள் மீது எல்லையற்ற...

கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மல்வத்து அஸ்கிரி மகாநாயக்கர்களை தரிசித்து ஆசிர்வாதம் பெற்ற சஜித் பிரேமதாச, கண்டி நாத தேவாலய வளாகத்தில் மகா சங்கத்தினரால் நடாத்தப்பட்ட ஜயபிரித் கீர்த்தனையிலும் கலந்துகொண்டார் அதன் பின்னர் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், "மதுபான அனுமதி உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கி மக்களை கவரும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், ஆட்சிக்கு வந்தவுடன் அரசியல் சூதாட்ட கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பேன்" எனவும் தெரிவித்தார். மக்களை துன்பங்களிலிருந்து விடுவித்து வளமான மற்றும் சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்குவதே தனது நோக்கம் என்றும் அவர் வலியுறுத்தினார். மக்கள் மீது இயன்றளவு சுமையை ஏற்றிவிட்டு நாடு வழமைக்கு திரும்பியுள்ளதாக ஜனாதிபதி தெரிவிப்பதாகவும், இது ஒரு புதிய நியாயப்படுத்தல் எனவும் உற்பத்திப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, முதலீடும், சேமிப்பும் செய்ய முடியாத சூழ்நிலையில் மக்கள் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## தாய்லாந்தின் புதிய பிரதமராக...

என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு அக்கட்சியைச் சேர்ந்த ஸ்ரெத்தா தவிசின் தாய்லாந்தின் பிரதமராகப் பதவி வகித்தார். சிறைக்கு அனுப்பப்பட்ட முன்னாள் சட்டத்தரணி ஒருவருக்கு அமைச்சர் பதவியை வழங்கியதன் காரணமாக அவர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பிரதமர் பதவி ஏற்று ஓராண்டு கூட ஆகாத நிலையில் ஸ்ரெத்தா தமது பதவியை இழந்தார். இதை அடுத்து பேடோங்டார்ன் ஷினவத்ரா தாய்லாந்தின் அடுத்த பிரதமராக பதவி ஏற்கவுள்ளார். அவர் புதிய அமைச்சர்களை தேர்ந்தெடுப்பார் என்றும் அதனைத் தொடர்ந்து, தற்போதைய அமைச்சர்கள் பதவி விலகுவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேடோங்டார்ன் ஷினவத்ராவின் மாமியான யிங்லக் ஷினவத்ராவும் தாய்லாந்தின் பிரதமராகப் பதவி வகித்தவர்.

## பயிற்சி திறன்களை மேம்படுத்த...

வைக்கப்பட்டது. கிரிந்தவில் உள்ள இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் மேம்பட்ட பயிற்சி மையத்திலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இதனை நேற்று முன்தினம் (15) திறந்து வைத்தார். இந்த பயிற்சி திட்டம், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கு உதவுகிறது. இதன் மூலம் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் திறன்களை மேம்படுத்தவும் கடல்சார் சவால்களை எதிர்கொள்ளவும் உதவுகிறது. நிகழ்வில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். கடற்கொள்ளைகளை எதிர்த்தல், விசேட பயிற்சிகள், கடத்தல்களை எதிர்த்தல், கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படும். இந்நிகழ்வில் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பூஜித விதான, கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழர் தரப்பு பொது வேட்பாளருக்கே...

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற வேட்புமனு கையளிப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறுகையில்,

“தமிழ் பொது வேட்பாளரான பா.அரியநேத்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறார். ஜனாதிபதி தேர்தலில் கட்சி சார்பில் சிந்திக்காமல் தமிழ் மக்கள் சார்பில் சிந்திக்க வேண்டும். இதற்கான கட்டாயம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

கட்சி ரீதியில் முரண்பட்டுக்கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். தமிழ் மக்களின் அடையாளமாக பா.அரியேத்திரனை 89 கட்சி தரப்பினர் தேர்ந்தெடுத்துள்ளனர். இனி அவரை பற்றியோ, அவரின் கட்சி பற்றியோ பேசுவது அவசியமில்லை. தமிழ் மக்களின் அடையாளமாக விளங்கும் அரியநேத்திரனுக்கு சகல தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும்.

தமிழ் வேட்பாளர் விவகாரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுதியான தீர்மானத்தை எடுக்காமல் இருப்பது மன வருத்தத்துக்குரியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார்கள். வெளிப்படையாக இதனை குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால், ஒரு சிறுபான்மை தரப்பினர் இதனை தடுக்கிறார்கள். ஆகவே, இவர்கள் தமது முரண்பாடுகளை விட்டு விட்டு தமிழ் வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இலங்கைத் தமிழரசு கட்சி உறுதியாக தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்பதை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.

## விசர் நாய்க்கடி அதிகரிப்பு...

நீர்வெறுப்பு நோய் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு இல்லாத காரணத்தாலேயே, இவ்வாறான மரணங்கள் இடம்பெறுவதாக அந்நோய் தொடர்பான மருத்துவ நிபுணர் அதுலலியனபத்திரன தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் இதற்கு முன்னரான ஆண்டுகளை விட கடந்த ஆண்டு விசர் நாய்க்கடி நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 வீதமாக குறைவடைந்துள்ளதாகவும் ஆனால் இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 11 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் முறையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படாமையே இந்த மரணங்களுக்கு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் காணப்படும் 300 அரசாங்க வைத்தியசாலைகள் நீர்வெறுப்பு நோய் தடுப்பு மருந்தை வழங்குகின்றன. கடுமையான விசர் நாய்க்கடி ஏற்பட்டால் அதற்கான தடுப்பூசியும் சுமார் 100 மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வருகிறது. இலவசமாகவே இதற்கான மருந்துகள் வழங்கப்படுவதால் விலங்குக் கடிக்கு உள்ளானவர்கள் உடனடியாக மருத்துவ சிகிச்சையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாற்றங்களை கொண்டுவர தயார்...

பரந்த கூட்டணியாக எமது கட்சி முன்னிலையாகிறது. எமது கட்சிக்குள் மக்கள் மாறவில்லை. மக்களின் பிரதிநிதிகளே மாறுகின்றனர்.

நாம் எமது நோக்கத்தை மக்களிடம் முன்வைப்போம். மக்களே அவர்களது முடிவுகளை எடுப்பர்” என அவர் தெரிவித்துள்ளார். தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கது. நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் தேசிய உற்பத்திகளை எம்மால் மாத்திரமே பாதுகாக்க முடியும்.

வெற்றிக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். அரசியலில் நண்பரும் இல்லை எதிரியும் இல்லை என்பார்கள். ஆகவே எம்மை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணைவரென்றும் தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்

## (17.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உங்களுக்கோ உங்களைச் சார்ந்தவர்களுக்கோ உடல் நல குறைபாடு ஏற்பட்டு அதனால் மருத்துவச் செலவு உண்டாகும்.

**ரிஷபம் :**
சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். தொடர்கதையாய் வந்த கடன் குறையும்.

**மிதுனம்:**
தொழில் மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் போன்றவை நிகழ வாய்ப்பு உண்டு. சிலருக்கு ஆரோக்கியத்தொல்லை அதிகரிக்கும்.

**கடகம்:**
விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். வீடு மற்றம், இடமாற்றம், உத்தியோகம் மாற்றம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.

**சிம்மம்:**
தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. உடன் பிறப்புகள் அல்லது உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் நேரம் இது.

**கன்னி:**
உத்தியோகம் மற்றும் தொழிலில் உன்னத நிலை உருவாகும். தன வரவு தாராளமாக வந்து சேரும்.

**துலாம்:**
பொருளாதார பெற்றாக்குறை அகலும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**
மங்கல நிகழ்சிகள் இல்லத்தில் நடைபெறும். தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும்.

**தனுசு:**
திடீர் திடீர் என நல்ல மாற்றம் வந்து சேரும். சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**மகரம்:**
சில தடைகளும் தாமதங்களும் குறுக்கீடுகளும் ஏற்படும். இருப்பினும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும்.

**கும்பம்:**
ஏற்றமும் இறக்கமும் கலந்த நிலை உருவாகும். எவ்வளவுதான் வரவு வந்தாலும் அதைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும்.

**மீனம்:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் வாழ்க்கை பாதையை சீராக்கிக் கொள்வீர்கள். எடுத்து முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## 13 நாடுகளில் குரங்கம்மை... (03ஆம் பக்கத் தொடர்)

இதுவரை 524 பேர் பலியாகியுள்ளனர். 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆபிரிக்க நாடுகளில் புது வடிவிலான வைரசாக இது பரவி வருகிறது.

கொங்கோவிலிருந்து புரூண்டி, கென்யா, ருவாண்டா மற்றும் உகாண்டா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கும் இது பரவியுள்ளது. எனினும், ஆபிரிக்காவில் குறைந்த தடுப்பூசி டோஸ்களே கையிருப்பில் உள்ளன.

இது பற்றி உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானம் கெப்ரியேசஸ் கூறும் போது, நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விடயம். இந்த வைரஸ், ஆபிரிக்காவை கடந்து பரவக்கூடிய ஆற்றல் படைத்துள்ளது என்பது அதிக வருத்தத்திற்குரியது என்று கூறியுள்ளார்.

இந்த சூழலில் உலக சுகாதார அமைப்பு, குரங்கம்மையை சர்வதேச சுகாதார அவசர கால நிலையாக அறிவித்துள்ளது.

## கட்சி உயர்பீட இரகசிய... (03ஆம் பக்கத் தொடர்)

எதிர்க்கட்சி தலைவராகச் செயற்படும் சஜித் பிரேமதாச, தனது சொந்த தொகுதிக்கு மட்டுமின்றி முழு நாட்டுக்குமே உதவி செய்கிறார். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தூரநோக்கோடு செயற்படும் இவர், நானூறு கற்றல் திரைகளை பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளார். பாடசாலைகளுக்கு பஸ் வண்டிகளை அன்பளிப்புச் செய்யும் கலாசாரத்தை சஜித் பிரேமதாசவே அறிமுகம் செய்தார். சுகாதாரத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக வைத்தியசாலைகளில் மூச்சுவிடும் திட்டத்தையும் இவரே அறிமுகப்படுத்தினார். காலத்தின் தேவைக்கேற்ற புதுப்புது திட்டங்களை செயற்படுத்தும் இவரிடம் நாட்டை ஒப்படைப்பதே சிறந்தது" என்று அவர் குறிப்பிட்டார்.

## புதுக்குடியிருப்பில்.... (03ஆம் பக்கத் தொடர்)

பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் நிலத்தில் பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போதும் ஆயுதங்களோ அல்லது வேறு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால் மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் உத்தரவிட்டதை தொடர்ந்து மூடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மேலதிக விசாரணையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கட்டவுட், பதாதைகளை அகற்ற...

அதன்படி நாடு முழுவதுமுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு நான்கு பணியாளர்கள், ஏ1 கிரேடு பொலிஸ் நிலையத்துக்கு மூன்று பணியாளர்கள், ஏ2 கிரேடு பொலிஸ் நிலையத்துக்கு மூன்று பணியாளர்கள், மற்ற பொலிஸ் நிலையங்களுக்கு இரண்டு பணியாளர்கள் என தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பணியமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு தினசரி ஊதியத்தை வழங்கும்.

## பாகிஸ்தானில் முதலாவது...

கழிவு நீரின் மாதிரியில் இந்த நோய் கிருமி கண்டறியப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை (15) சுவீடனில் குரங்கம்மை நோயுடன் முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோய் பரவல் காரணமாகக் கொங்கோ குடியரசில் மாத்திரம் 450 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## சிவப்பு சீனிக்கு அதிக...

கள் வெளியாகியுள்ளன. சில வர்த்தகர்கள் சில காலமாக இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

அங்கிருந்து 50 கிலோ எடையுள்ள 2,500 வெற்று சீனி பொதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், அதிலுள்ள சீனி இந்திய சிவப்பு சீனி என சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதா? என அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இவ்வாறு கலக்கப்பட்ட சிவப்பு சீனி ஒரு கிலோ 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## தங்க விலையில்...

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 735,203 ரூபாவாக காணப்படுகின்றது.

அத்தோடு 24 கரட் தங்கமானது கிராமுக்கு 25,940 ரூபாவாக பதிவாகியுள்ளது. 24 கரட் தங்கப் பவுண் 207,500 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை 22 கரட் தங்கமானது கிராமுக்கு 23,780 ரூபாவாக பதிவாகியுள்ளது. 22 கரட் தங்கப் பவுண் 190,250 ரூபாவாக பதிவாகியுள்ளது. 21 கரட் தங்கமானது ஒரு கிராமின் விலை 22,700 ரூபாவாக பதிவாகியுள்ளது. மேலும் 21 கரட் தங்கப் பவுண் நேற்றையதினம் 181,600 ரூபாவாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பௌசி, குமாரவெல்கம...

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாயிகிருந்த குமாரவெல்கம ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

குமாரவெல்கம எம்.பி., முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய நண்பர். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவை பொதுஜன பெரமுன களமிறக்கியதற்கு எதிராக குரல் கொடுத்த அவர், 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

# கிழக்கின் குரல்



# ஸ்ரீபுர துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் உயிரிழப்பு

**(கிண்ணியா மத்திய நிருபர்)**

திருகோணமலை ஸ்ரீபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் நேற்று (16) அதிகாலை 3.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஸ்ரீப்புர பகுதியை சேர்ந்த, 26 வயதான இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீப்புர பகுதியில், வீதியால் நடந்து சென்றுக் கொண்டிருந்த இளைஞனை, இலக்கு வைத்து, ஸ்ஹூட்டி மோட்டார் சைக்கிளில் வந்தவரால், இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் நடாத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த நபர், அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாமாங்கத்தில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா





**(காரைதீவு குறூப் நிருபர்)**

கல்முனை மாமாங்க வித்தியாலயத்தில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு நேற்று (16) வெள்ளிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்திய அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் பாடசாலை அதிபர் எஸ்.புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மேலும் கல்முனை வலயக்கல்வி பணிமனையின் இந்துசமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், சைவப் புலவர், வளவாளர் ஜோ. கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களை அதிதிகள் வழங்கினர். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சுவாமிகளின் படங்கள் வழங்கி வைக்கப்பட்டன. ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.

விழாத் தொடரின் ஏழாவது பாடசாலை நிகழ்வு இதுவாகும்.

# அட்டாளைச்சேனையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கரநாற்காலி, ஊன்றுகோல் வழங்கி வைப்பு

**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தைக்கா நகர் போன்ற கிராமங்களில் மாற்றுத்திறனாளி மற்றும் தீவிர நோய் பாதிப்புகளுக்குள்ளானவர்களுக்கு சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோல் என்பன அண்மையில் பிரதேச செயலகத்தில் வைத்து MAA நிறுவனத்தின் அனுசரணையில் PHO நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம் எஸ். ஜெளபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரீஎம். இர்பான் மற்றும் அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஷாபிர், அந்நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஏ எல் எம். தாபீத், மாவட்ட இணைப்பாளர் எப் எம். அம்ஜத் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களான ரீஎம். நசீர், எம் நுஸ்லி, முகம்மது ஆதில் மற்றும் எம்.இம்ரான் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு புதிய அடையாள அட்டை விநியோகம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**



சம்மாந்துறை வலயக்கல்விக் காரியாலய கல்வி சார்ந்த உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் புதிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் தலைமையில் நேற்று பணிமனையில் நடைபெற்றது.

கல்வி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இப்புதிய அடையாள அட்டை அணிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி கல்வி பணிப்பாளர்கள் உதவி கல்வி பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் வளவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்கோவிலில் தமிழ் மொழித்தின போட்டி ஆரம்பம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**



அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிக்கான கல்முனைக்கல்வி வலய போட்டிகள் நேற்று முன்தினம் (15) தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமானது.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார் தலைமையில் அதன் ஆரம்ப விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.சிவ. ஜெயராஜன், கலாநிதி கரி கோல்சன் மற்றும் ஆர். லாசன், சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துள்ளா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு



கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய இருமொழிப்பிரிவு மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு முதலியார் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், இருமொழிப்பிரிவு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(எம்.எம்.ஜெஸ்மின்)

# வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு தேசிய விருது

**(மட்டக்களப்புகுறூப்நிருபர்)**



சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய ரீதியில் சிறப்பாக சேவையாற்றி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் முதலிடம் பெற்றமைக்காக தேசிய விருது வழங்கப்பட்டது.

சுக வனிதையர் சிகிச்சை சேவைகள் தொடர்பான தேசிய ரீதியிலான மதிப்பீட்டில் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் மத்தியில் அதி உயர் தரக்கணிப்பின் மூலம் புத்தாக்கம், படைப்பாற்றல் மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் மிகச் சிறப்பான சேவையை அனைத்து தேசிய ரீதியான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களை விட சிறப்பாக வழங்கியமைக்காக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு தேசிய ரீதியில் முதலிடம் வழங்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு மருத்துவ பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி பாலித மஹிபால, அமைச்சின் பிரதிநிதி சுசில் பெரேரா, ஐக்கிய நாடுகள் பிரதிநிதி, மற்றும் குடும்ப சுகாதார பணியகத்தின் தலைவர் சித்ரமாலி டீ சில்வா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இவ்விலக்கை அடைய குடும்ப சுகாதார பணியகம், பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் பிராந்திய தாய் சேய் சுக நல பிரிவினரின் வழிகாட்டல் உறுதுணையாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் மீண்டும் இரண்டாவது தடவையாக தெரிவு

**(அம்பாறை, ஒலுவில் விசேட நிருபர்கள்)**



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியாக, பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் மீண்டும் இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய பீடாதிபதியினைத் தெரிவு செய்யும் வைபவம் வியாழக்கிழமை (15) பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் தலைமையில் ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தினுடைய உயர் சபை உறுப்பினர்கள், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.ரீ. அஹமட் அஷ்ஹர் மற்றும் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் ஏ.ஆர்.எம். சுல்பி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் போட்டியிட்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் மீண்டும் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பீடாதிபதியாக மீண்டும் செயற்படவுள்ளார்.

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா புலமைப் பரிசில் பெற்று மேஜி பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் முதுமாணிப் பட்டத்தினையும். உலக வங்கியின் நிதிப் புலமைப்பரிசில் பெற்று மலேசியாவின் மலாயாப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிக் கற்கையினையும் நிறைவு செய்துள்ளார். பேராசிரியர் எம்.எம். பாஸில் இலங்கை முஸ்லிம் அரசியல், இனத்துவப் பிணக்குகள், சமூக நல்லிணக்கம், மனித உரிமைகள், சர்வதேச உறவுகள் போன்ற துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

# கிழக்கு மாகாண ஜீனியஸ் 7 விருது

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய இளைஞர் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரித்தானிய 'எடின்பரோ கோமகன் சர்வதேச விருது வழங்கல் விழாவில் கிழக்கு மாகாணத்தில் ஜீனியஸ்7 விருதுப் பிரிவு(G7 Award Unit) மற்றும் கோல்டன் அசிவர்ஸ் (Golden Achievers Award unit) விருதுப் பிரிவு ஊடாக சுமார் 63 இளைஞர் யுவதிகள் வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான விருது வழங்கும் விழா மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதான கேட்போர் கூடத்தில்(13) இடம் பெற்றது.

இந் நிகழ்வில் முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளரும் ,இலங்கை சிரேஷ்ட நிருவாக அதிகாரியுமான ஏ.எல்.எம் சலீம் ,மையோன் குறூப் கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளார் ரிஸ்லி முஸ்தபா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர், மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், மாவட்ட மற்றும் தேசிய சம்மேளத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காட்டு யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

**(பாசிக்குடா நிருபர்)**

கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சின்னமியான்கல் வயல் பிரதேசத்தில் காட்டுயானை தாக்கியதில் விவசாயியொருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவெம்பைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின தந்தையான மா.சுப்பிரமணியம் (62 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தொழில் நிமித்தம் தமது மனைவியுடன் சின்னமியான்கல் கிராமத்தில் வசித்து வந்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி மாலை வழக்கம் போல் மேய்ச்சலுக்கு சென்று மாடுகளை எடுத்து வரும் போது இருள் சூழ்ந்து காணப்பட்டதால் வழியில் நின்ற யானை அவரை தாக்கியுள்ளது.


இவரது அழுக்குரல் சத்தம் கேட்டு வாடியில் நின்ற மனைவி யானையின் தாக்குதலிலிருந்து அவரை காப்பற்ற ஓடியபோதும் முயற்சி பலனளிக்கவில்லை.

அவரது சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை மேற்கொண்ட கோறளைப்பற்று திடீர் மரண விசாரணை அதிகாரி உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக சட்டவைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைத்தனர்.

# கிண்ணியாவில் கசிப்பு வடித்த இருவர் கைது!

**(கிண்ணியா மத்திய நிருபர்)**



கிண்ணியா, கண்டல்காடு பிரதேசத்தில் கசிப்பு வடித்த இருவரை கடந்த (14) கிண்ணியா பொலிஸ் நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கிண்ணியா ஆலங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 40 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதோடு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



மூதூர் வலயத்தின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக ஏ.எல்.சிராஜ் தமது கடமைகளை நேற்று (15) பொறுப்பேற்றுக் கொண்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# நற்பிட்டிமுனை நூலகத்தில் வாசகர் வட்டம் உதயம்

**(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)**

கல்முனை மேற்கு கரவாகுப்பற்று நற்பிட்டிமுனை நூலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் வாசகர் வட்டம் உதயமாகியது.

தமிழ், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்கள், புத்திஜீவிகள். சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். அம்பாறை மாவட்ட உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த சனசமூக உத்தியோகத்தர் என். எம் ஸாஹீர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. நூலகர் என். எம் அமீனுதீனின் மேற்பார்வையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிர்வாகத்தெரிவும் நடைபெற்றது.

# வடக்கின் உதயம்

## மயக்க மருந்து நிபுணரை இடமாற்றுமாறு அதிகாரிகள் கடும் அழுத்தம்; எதிர்த்து போராடும் நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் கடமையில் இருக்கும் ஒரேயோரு மயக்க மருந்து நிபுணரை இடமாற்றம் செய்யுமாறு வட மாகாண சுகாதார அமைச்சின் உயர் மட்டத்தில் இருந்து கடும் நெருக்கு வாரம் ஏற்படுத்தப்பட்டு வருவதாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வடமராட்சி, வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சியைச் சேர்ந்த ஒருபகுதி மக்கள் தமது சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் அங்கு கடமையில் இருக்கும் ஒரே ஒரு மயக்க மருந்து நிபுணரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு இடம் மாற்றுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருக்கு வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சமன் பத்திரன தரப்பில் இருந்து கடும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது.

முல்லைத்தீவு மருத்துவமனை வெற்றிடத்திற்கு, தற்போது எட்டு மயக்கமருந்து நிபுணர்களை வைத்திருக்கும் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஒருவரை விடுவிக்காது தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இருக்கும் ஒரே ஒரு மயக்க மருந்து நிபுணரை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருக்கும் மயக்க மருந்து நிபுணரை இடம் மாற்ற உயர்மட்டத்தின் ஊடாக நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக அறியமுடிகிறது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையில் உள்ள மயக்க மருந்து நிபுணரை இடம் மாற்றம் செய்தால் அதற்கு பிரதியீடான மயக்க மருந்து நிபுணர் சுமார் ஒன்றரை மாதத்திற்கு பின்னரே நியமிக்கப்படும் நிலை ஏற்படும்.

கடந்த மாதத்தில் மட்டும் மயக்கமருந்து நிபுணரின் பங்கேற்புடன் நூற்றிற்கு மேற்பட்ட சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அவரை இடம்மாற்றுவதானது, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகள் முற்றாக முடங்கும் ஆபாயம் இருப்பதனால் குறித்த இடமாற்றத்தை செய்ய முடியாதுள்ளதாக வைத்தியசாலை தரப்பில் மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இந்நிலையில் நோயாளர்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது தொடர்ந்தும் நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுமாயின் நீதி கோரி போராட்டம் நடத்தியேனும் மயக்க மருந்து நிபுணரை தக்கவைக்க பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தரப்பினர் உறுதியாக இருப்பதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் உடுவில் பிரதேச செயலகத்தில் விசாரணைகள் ஆரம்பம்



**யாழ். விசேட நிருபர்**

காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினால் யாழ். மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிடம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உடுவில், கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களிடையே இவ் விசாரணைகள் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் உடுவில் பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது. இன்றைய தினம் சனிக்கிழமை பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்திலும் விசாணைகள் இடம்பெறவுள்ளன.

## நாகர்கோவில் முருகையா தேவஸ்தான பெருந்திருவிழாவின் கொடியேற்றம் நாளை

**கரவெட்டி தினகரன் நிருபர்**

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை (18) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 16 நாட்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

இப்பெருந்திருவிழாவில், 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன திருவிழாவும், 28ஆம் திகதி புதன்கிழமை வசந்தோற்சவமும், 29 ஆம் திகதி வியாழக்கிழமை திருமண உற்சவமும், 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டை உற்சவமும், 31 ஆம் திகதி சனிக்கிழமை சப்பர உற்சவமும், 01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், 02 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்.

## உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஸ்ரீமத் நாராயண சுவாமி ஆலய வழிபாட்டிற்கு 34 வருடங்களின் பின் அனுமதி

**யாழ். விசேட நிருபர்**





யாழ்ப்பாணம் வலி வடக்கு நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஆலயத்திற்கு சுமார் 34 வருடங்களுக்கு பின்னர் மக்கள் சென்று வழிபட இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள், அமைந்துள்ள ஸ்ரீமத் நாராயண சுவாமி ஆலயத்திற்கு செல்லவே நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவ் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் வசித்த மக்கள் நேற்றைய தினம் ஆலயத்திற்கு சென்று வழிபட்டு பொங்கல் பொங்கி, ஆலய சூழலில் சிரமதான பணிகளையும் முன்னெடுத்தனர். அப்பகுதிகளில் இருந்து சுமார் 34 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த எம்மை மீள எமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்காத நிலையில், நாம் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தான் வாழ்கிறோம்.

எமது ஆலயத்திற்கு வெள்ளிக்கிழமைகளில் வரவே தற்போது அனுமதி வழங்கியுள்ளனர்.

மிகவிரைவில் எம்மை எமது சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஆலயத்தை புனரமைத்து, தினமும் வழிபட அனுமதிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

## செல்வச்சந்நிதி ஆலய சப்பரத்திருவிழா இன்று

**கரவெட்டி தினகரன் நிருபர்**

சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் சப்பரத்திருவிழா இன்று 17 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. அன்றைய தினம் மாலை 6 30மணிக்கு மௌனத்திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவுறும். மறு நாள் 20 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை தொண்டர் விழா பூஜை நடைபெறும்.

தேர், தீர்த்தத்திருவிழாக்களை ஒட்டி விசேட போக்குவரத்து, சுகாதார குடிதண்ணீர், பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்தினங்களில் சந்நிதி சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமம் உட்பட சுமார் 20 மடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

## நல்லைக்குமரன் மலர் வெளியீடும் யாழ். விருது வழங்கல் நிகழ்வும்





**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ். மாநகராட்சி மன்றம், சைவ சமய விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் நல்லைக்குமரன் மலர் வெளியீடு 32 மற்றும் யாழ். விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (15) நல்லூர் நல்லை ஆதீன திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும் யாழ். மாநகர சபை ஆணையாளருமான ச.கிருஷ்னேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

நல்லைக்குமரன் மலரின் முதற் பிரதியினை பிரதம அதிதியாக கலந்துகொண்ட யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சி.சற்குணராஜாவும் இவ்விழா தலைவர் ச.கிருஷ்னேந்திரனும் இணைந்து வெளியிட்டு வைக்க தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவருமான கலாநிதி ஆறுதிருமுருகன் பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து யாழ். விருது யாழ். போதனா வைத்தியசாலை மகபேற்று நிபுணர் ந.சரவணபவாவிடம் வழங்கப்பட்டதுடன் பொற்கிழி பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

நல்லைக்குமரன் மலர் வெளியீடு 32 க்கான ஏற்புரை, சிறப்புரை, கவிப்புரை, நயப்புரை என்பன இடம்பெற்றதுடன் மதத்தலைவர்களின் ஆசியுரையும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், நல்லை ஆதீன குரு முதல்வர் தேசிக ஞான சம்பந்த பிரமச்சாரிய சுவாமிகள் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ் மாநகராட்சி மன்றம், சைவ சமய விவகாரக் குழுவின் நிர்வாகத்தின் உறுப்பினர்கள், ஓய்வு நிலை பெற்ற யாழ். பல்கலைகழக வாழ் நாள் பேராசிரியர்கள், கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## செட்டிகுளத்தில் வாள்வெட்டு நால்வர் படுகாயம்

**வவுனியா விசேட நிருபர்**

செட்டிகுளம், மெனிக்பாம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (16/08) இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அதிகாலை குறித்த வீட்டில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த போது இனம்தெரியாத நபர்கள் வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், வாள்வெட்டு தாக்குதலிலும் ஈடுபட்டனர்.

இதன்போது வீட்டில் இருந்த முதியவர்களான ஐயர் மற்றும் அவரது மனைவி அத்துடன் குறித்த வீட்டில் இருந்த மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவர் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் பறயநாலங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் புதிய பிராந்திய அலுவலகம் வவுனியாவில்



**வவுனியா விசேட நிருபர்**

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் புதிய பிராந்திய அலுவலகம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மன்னார் வீதியில் காமினி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக குறித்த பிராந்திய அலுவலகம் நேற்று (16/08) திறந்து வைக்கப்பட்டது. குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வவுனியா, உள்வட்ட வீதியில் செயற்பட்டு வந்த நிலையில் போதிய இடவசதி மற்றும் ஏனைய வசதிகள் இன்மையால் கடந்த 2 ஆம் திகதி முதல் அவ் அலுவலகத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, புதிய அலுவலகம் போதிய வசதிகளுடன் 24 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், கடவுச்சீட்டு சேவைகளும் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது குடிவரவு குடியகல்வு திணைக்கள சேவைகளைப் பெறுவதற்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வில் குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ச இலுக்பிட்டிய, மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ. சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், ஆட்பதிவு திணைக்கள வவுனியா பிராந்திய அலுவலகப் பணிப்பாளர் கிருபாகரன், பொலிஸ் அதிகாரிகள், மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## நடராஜா இரத்தன தீபம் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் 1500 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கல்



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

அனலைதீவு யாழ்ப்பாணத்தினை பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் கிளிநொச்சியினை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவநெறிச்செல்வர் நடராசா இரத்தினம் அவர்களின் நூற்றாண்டு நிறைவினை முன்னிட்டு நடராஜா இரத்தன தீபம் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியினை சேர்ந்த 1500 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் (15.08.2024) உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. தாயாரின் நூற்றாண்டு நினைவாக பிள்ளைகள் அவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் உருத்திரபுரம் முருகன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு கிராம மக்களுக்கு அன்னதானம் வழங்கிவைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் உருத்திரபுரம் கிழக்கு, சிவநகர், செல்வாநகர், ஜெந்திநகர் ஆகிய நான்கு கிரமசேவையாளர் பிரிவின் 1500 வரையான குடும்பங்களுக்கு தலா 3500 ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டுள்ளன.





கரவெட்டி தேவமாதா ஆலய வருடாந்த திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் (படம் கரவெட்டி தினகரன் நிருபர்)

## வவுனியாவில் மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஓமந்தை, ஆறுமுகத்தான்குளம் பகுதியில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் நேற்று (16/08) அதிகாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வியாழக்கிழமை இரவு தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மகனை நீண்ட நேரமாகியும் காணாமையினால் அவரது தந்தை தேடியுள்ளார். இதன்போது காணியின் பின்புறத்தில் குறித்த இளைஞர் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் பத்மநாதன் டயான் (வயது 21) என்ற இளைஞரே மரணமடைந்துள்ளார். அவர் வீட்டின் பின்புறத்தில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# HNB பொதுக் காப்புறுதி கூட்டாண்மை மூலம் பயன்பெறும் Cargills வங்கி வாடிக்கையாளர்

Cargills வங்கி வாடிக்கையாளர்களின் உரிய தேவைகளுக்கு ஏற்றவாறு பொதுக் காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதற்காக Cargills வங்கியுடன் ஒரு மூலோபாய கூட்டுறவை HNB பொதுக் காப்புறுதி (HNB GI) அறிவித்துள்ளது. Cargills வங்கியின் வாடிக்கையாளர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்குமான விரிவான பாதுகாப்பு மற்றும் நிதிப் பாதுகாப்பிலிருந்து பயனடைவதை இந்த ஒத்துழைப்பு தற்போது உறுதி செய்கிறது. Cargills வங்கியின் வலுவான விவசாயப் பொருட்களை வழங்கும் வாடிக்கையாளர்களுக்கு, தங்களது செயற்பாடுகள் மற்றும் விவசாய நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு வகையான பொதுக் காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் இந்த கூட்டாண்மை முக்கிய பயனளிக்கும் என, HNB GI பொதுக் காப்புறுதி நிறுவனத்தின் முகாமைத்துவம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது பற்றி HNB பொதுக் காப்புறுதி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சித்துமின ஜயசுந்தர தெரிவிக்கையில், "இந்தக் கூட்டாண்மையானது எமது சந்தை இருப்பை மேலும் உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மேம்பட்ட வாடிக்கையாளர் திருப்திக்காக விரிவான நிதி மற்றும் காப்புறுதி சேவைகளை ஒருங்கிணைக்கும் எமது அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகின்றது" என்றார்.



சித்துமின ஜயசுந்தர மேலும் தெரிவிக்கையில், "HNB GI ஆனது Global Banking and Finance UK இனால் 2024 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சிறந்த வங்கிக் காப்புறுதி வழங்குனராக அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. Cargills வங்கியுடனான எமது ஒத்துழைப்பு எமது சந்தை நிலையை மேலும் பலப்படுத்துவதோடு. எமது வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புத்தாக்கமான தயாரிப்புகள் மற்றும் ஒப்பிட முடியாத சேவையை வழங்க எமக்கு உதவுகிறது. இந்த கூட்டாண்மையை வெற்றியடையச் செய்வதில் ஒத்துழைப்பு வழங்கிய Cargills வங்கிக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்." என்றார்.




# புதுப் பொலிவுடன் விஷன் கெயார் திருகோணமலை கிளை திறப்பு

இலங்கையின் முன்னணி பார்வை மற்றும் கண்ணாடி தீர்வு வழங்குநரான விஷன் கெயாரானது அதன் புதுப்பிக்கப்பட்ட திருகோணமலை கிளையினை அண்மையில் திறந்து வைத்துள்ளது. திறப்பு விழாவில் கண் சத்திரசிகிச்சை நிபுணரான டாக்டர் மங்கள திஸாநாயக்க மற்றும் விஷன் கெயார் நிறுவனத்தின் நிர்வாகிகள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக திருகோணமலை சமூகத்திற்கு சேவையாற்றி வரும் விஷன் கெயார் தனது கிளையை வாடிக்கையாளர்களுக்கு நவீன தோற்றம், அதிகரித்த உட்புற இடம் மற்றும் விரிவாக்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக புதுப்பித்துள்ளது. திருகோணமலை குடியிருப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த கிளை, மேம்பட்ட வாடிக்கையாளர் பராமரிப்பு மற்றும் அனுபவத்துடன் சமூகத்திற்கு சிறந்த சேவையை வழங்குவதற்கான விஷன் கெயாரின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. தற்போதைய திருகோணமலை கிளையானது நவீன அழகியல் மற்றும் அதிநவீன கண் பராமரிப்பு உபகரணங்களைக் கொண்டுள்ளதுடன் சிறப்பு தேர்ச்சி பெற்ற கண் பரிசோதனை நிபுணர்களையும் பணியமர்த்தியுள்ளது.



மேம்படுத்தப்பட்ட திருகோணமலை கிளைக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள் மூக்குக்கண்ணாடிகள், கூலிங்கண்ணாடிகள் மற்றும் காண்டாக்ட் லென்ஸ்கள்(contact lenses) உட்பட விரிவான அளவிலான கண்ணாடி தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம். ரேபான் (RayBan) வோக்(Vogue), மற்றும் பல புகழ்பெற்ற பிராண்டுகளின் கவர்ச்சிகரமான வரிசையை விஷன் கெயாரின் திருகோணமலை கிளை பெருமையுடன் வழங்குகிறது. பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான செவிப்புலன் தீர்வுகளையும் திருகோணமலை கிளை வழங்குகின்றது.

# BYD காட்சியறை மற்றும் சேவை மையத்தை திறந்த John Keels CG Auto

இலங்கையில் BYD பயணிகள் வாகனங்களின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான John Keels CG Auto ஆனது, Plugin Hybrid BYD SEALION 6 DM – i இன் அறிமுகத்துடன் கொழும்பில் BYD காட்சியறை மற்றும் சேவை மத்திய நிலையத்தை திறந்து வைத்துள்ளது.

கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இல. 447 இல் அமைந்துள்ள காட்சியறையில் நடைபெற்ற இந்த பிரமாண்டமான திறப்பு நிகழ்வில், BYD Auto Industry Co. Ltd, ஆசிய பசிபிக் ஆட்டோ விற்பனைப் பிரிவின் பொது முகாமையாளர், Liu Xueliang, John Keells குழுமத்தின் தலைவர், Krishan Balendra மற்றும் CG Corp Global இன் முகாமைத்துவப் பணிப்பாளர் Nirvana Kumar Chudhary உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய BYD Auto Industry Co. Ltd, Auto Sales பிரிவின் (ஆசியபசுபிக்) பொது முகாமையாளர், Liu Xueliang, இலங்கைக்கு ஒரு நிலைத்தன்மைக் கொண்ட போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை ஏற்றுக்கொள்ள ஆதரவளிப்பதாக உறுதியளித்தார். அவர் மேலும் கூறுகையில், “கடந்த 27 ஆண்டுகளில், பல்வேறு பிராந்தியங்களில் நிலைத்தன்மைக் கொண்ட போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதில் ஒவ்வொரு அம்சத்தையும் சரியானதாக மாற்ற நாங்கள் பணியாற்றி வருகிறோம். பேட்டரிகள், மின்சார மோட்டார்கள், இலத்திரனியல் கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் Automotive Grade Chips வரையிலான தொழில்நுட்பங்களில் எமக்கு காணப்படும் நிபுணத்துவம் மற்றும் அனுபவம் ஆகியன, புதிய ஆற்றல் வாகனங்களில் (New Energy Vehicles) உலகளாவிய ரீதியில் எம்மை முன்னணியில் வைத்துள்ளது.” என்றார்.



# ஒலிம்பிக், பராலிம்பிக் இற்கான காப்புறுதிப் பங்குதாரர் Allianz

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றாகவும், Allianz SE இன் அங்கமாகவும் திகழ்ந்து வருகின்ற அலியான்ஸ் லங்கா, ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் போட்டிகளுக்கான உலகளாவிய காப்புறுதிப் பங்காளராக செயற்பட, பெருமையுடன் முன்வந்துள்ளது. தற்போது இடம்பெற்று வருகின்ற பரிஸ் 2024 போட்டிகளுடன், விளையாட்டு வீரர்கள் மீது அலியான்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பு, உலகளாவிய, மகத்துவம், நட்பு, மற்றும் மரியாதை ஆகிய ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் விழுமியங்களை ஊக்குவிப்பதில் தனது உறுதிப்பாட்டையும் அது வெளிக்காண்பித்துள்ளது. மக்களை ஐக்கியப்படுத்தி, நேர்மறை மாற்றத்தை முன்னெடுப்பதில் விளையாட்டுக்களின் வலிமை மீது தான் கொண்டுள்ள நம்பிக்கையை தொடர்ச்சியாக வெளிக்காண்பித்து, சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஆதரவளிக்கும் தனது மரபினைக் கட்டியெழுப்பும் வகையில் 2024 பரிஸ் போட்டிகளுடனான அலியான்ஸின் பங்களிப்பு காணப்படுகின்றது.

2021 இல் இந்த நீண்ட கால கூட்டு ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உலகளாவிய விளையாட்டு வீரர்களைக் கொண்ட பாரிய சமூகத்திற்கு ஆதரவளித்து, ஒலிம்பிக் கட்டமைப்பிற்கு விரிவான காப்புறுதியையும், பல்வகைப்பட்ட சேவைகளையும் அலியான்ஸ் வழங்கியுள்ளது. 2024 பரிஸ் ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் போட்டிகள் முறையே ஜுலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை மற்றும் ஆகஸ்ட் 28 முதல் செப்டெம்பர் 8 வரை திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அலியான்ஸின் ஈடுபாடானது பாதுகாப்பு மற்றும் மகத்துவத்தில் கவனம் செலுத்தியவாறு போட்டிகள் இடம்பெறுவதை உறுதி செய்கின்றது.

பராலிம்பிக் போட்டிகளுடனான அலியான்ஸின் ஒப்பந்தம் 2006 ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதாகும்.

# வவுனியா பல்கலைக்கழகத்துடன் புத்தளம் PICTA அமைப்பு ஒப்பந்தம்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளத்தில் இயங்கி வரும் PICTA (Puttalam ICT Association) தொண்டு நிறுவனம் அண்மையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீடத்துடன் ஒரு ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டது.

இதில் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தல், மனிதவள மேம்பாட்டு திட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இத்திட்டங்களை விரிவுபடுத்தல் போன்ற பல செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தம் மூலம் பல நன்மைகள் உள்ளதாக, Picta தலைவர் ஏ.கே.அப்ராஸ் தெரிவித்தார்.

# வருடாந்த IT Gallery Partner Summit 2024 HIKSEMI பங்களிப்பாளர்கள் கௌரவிப்பு

2018 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வரும் வருடாந்த IT Gallery Partner Summit மாநாடானது, தொழில்துறையில் புத்தாக்கம் மற்றும் தொடர்புகளை மேம்படுத்துவதில் இடம்பெறும் முக்கிய நிகழ்வாக காணப்படுகின்றது. இவ்வருடம் தமது கூட்டாண்மையைக் கொண்டாடும் வகையில் இலங்கையிலுள்ள HIKSEMI முகவர்களை பாராட்டி கௌரவிக்கும் HIKSEMI Sri Lanka Dealer Appreciation Conference 2024 மாநாட்டை அறிமுகப்படுத்துவதில் IT Gallery பெருமிதம் கொள்கிறது. 4 வருடங்களுக்கு முன்னர் HIKSEMI வர்த்தக நாமத்தை தமது சேமிப்பக தீர்வுகள் மற்றும் தயாரிப்புகளின் பிரதான விநியோகஸ்தராக IT Gallery Computer (Pvt) Ltd இலங்கைக்கு அறிமுகப்படுத்தியிருந்தது.

2023 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ITG மற்றும் HIKSEMI வணிகத்திற்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய முதலிடத்திலுள்ள மூன்று பங்குதாரர்களை கௌரவிக்கும் நோக்கில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

விநியோகஸ்தர் வலையமைப்பை வலுப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் ஒரு வாய்ப்பை இது ஏற்படுத்தியது. இந்த நிகழ்வில் PCIe 4.0 NVMe SSD Future Pro and Future Lite, Future DDR5, Gaming Solution, Surveillance SSD V300X, HighSpeed Micro SD NEO LUX, Professional Camera, SD Portable E Sd Portable, NVMe SSD Elite series மற்றும் SSD USB Ultra உள்ளிட்ட பல்வேறு புதிய தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

தெற்காசிய HIKSEMI விற்பனை முகாமையாளர் பிரையன் இங்கு தெரிவிக்கையில், “இந்த பிரத்தியேக நிகழ்வில் எமது முக்கியமான மூன்று பங்குதாரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகளை கொண்டாடுவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். அவர்களது முக்கிய பங்களிப்புகள் இலங்கையில் ITG – HIKSEMI இடையேயான வணிகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளது." என்றார்.



# தரமான மூலப்பொருட்கள் மூலம் மீண்டும் சுவையான Chirpy Chips

இலங்கையின் நீண்ட கால வரலாற்றைக் கொண்ட தின்பண்ட உற்பத்தியாளரான Uswatte confectionery Works Pvt Ltd. நிறுவனம், 68 ஆண்டுகளுக்கும் மேலாக உயர்தர தின்பண்டங்கள், இனிப்புகள் மற்றும் சிற்றுண்டி உணவுகளை வழங்கி வருகிறது. அந்த வகையில் அனைவரதும் அபிமானம் பெற்ற உருளைக்கிழங்கு நொறுக்குத் தின்பண்டமான Chirpy Chips தயாரிப்பை மாற்றங்களுடன் மீள அறிமுகப்படுத்துவதில் நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது. வேடிக்கை நிறைந்த இந்த சிற்றுண்டியானது, தூய உருளைக்கிழங்கைப் பயன்படுத்தி நுணுக்கமாகத் தயாரிக்கப்படுவதோடு, ஒவ்வொரு கடியிலும் 100% உண்மையான உணவின் பெறுமதியை உறுதியளிக்கிறது. Chirpy Chips முதன்முதலில் 1994 இல் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அவ்வேளையில் நாட்டிற்கு உயர்தர உருளைக்கிழங்கை இறக்குமதி செய்வதில் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடு காரணமான அரசாங்கக் கொள்கைகள் காரணமாக அது இடைநிறுத்தப்பட்டது.



Chirpy Chips மிகவும் கட்டுப்படியான விலையிலும், மிகவும் வசதியான சிற்றுண்டித் தெரிவாகவும் அமைகின்றது. இது பசியை போக்குவதோடு மட்டுமல்லாமல், முதல் கடி முதல் நுகர்வோரை இயற்கையான பொருட்களின் சுவைக்குள் மூழ்கடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சிப்ஸ்கள் Cheese & Onion, Salted, Hot N Spicy (சீஸ் மற்றும் வெங்காயம், உப்பு சேர்ந்த, உறைப்பு சேர்ந்த) ஆகிய மூன்று சுவைகளில் கிடைக்கின்றன. இவை 16 கிராம் ரூ.70, 24 கிராம் ரூ.100, 50 கிராம் ரூ.200, 73 கிராம் ரூ.300 என பல்வேறு அளவுகளில் கிடைக்கிறது. அது மாத்திரமன்றி, உள்ளூர் கடைகள் மற்றும் முன்னணி பல்பொருள் அங்காடிகளில் கிடைக்கின்ற உண்மையான உருளைக்கிழங்கு கொண்ட ஒரேயொரு சிப்ஸ் வர்த்தக நாமமாக இது காணப்படுகின்றது.

# நவீன தொழில்நுட்பத்துடன் உயர் தர பால் தயாரிப்பு வழங்கும் அம்பேவல

Lanka Milk Foods (CWE) PLC நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற அம்பேவல பால் தயாரிப்புக்கள், அவற்றின் புத்தம்புதிய தன்மை மற்றும் தரம் காரணமாக அனைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படுகின்ற நாமமாகத் திகழ்ந்து வருகின்றன. இலங்கையின் பசுமையான மேட்டு நிலங்களில் உற்பத்தியாகின்ற அம்பேவல தயாரிப்புக்கள் அனைத்தும் பண்ணையிலிருந்து குடும்பங்களை எட்டும் வரையில், அதியுயர் தரம் கொண்ட பால் தயாரிப்பு பூரிப்புக்கள் என்பதை உறுதி செய்வதற்காக மிகக் கவனமான செயல்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது.



மிகக் கடுமையான அதிநவீன தராதரங்களை பூர்த்தி செய்யும் வகையில், அம்பேவல பால் பண்ணை சர்வதேசரீதியாக சான்றுபடுத்தப்பட்ட செயல்முறைகளைப் பின்பற்றுவதுடன், புத்தம்புதிய தன்மையைக் கொண்டிருப்பதற்காக, பால் விரைவாக குளிர்விக்கப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டு, போக்குவரத்தின் மூலமாக கொண்டு செல்லப்பட்டு, மற்றும் பொதி செய்யப்படுகின்றது. பால் கறத்தல் முதல் பொதி செய்யப்படுவது வரை, ஒட்டுமொத்த செயல்முறையும் விரைவாக மேற்கொள்ளப்படுவதுடன், தரம் தொடர்பான கண்காணிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

ஆய்வுகூட சோதனைகளின் போது சின்னஞ்சிறு மாறுபாடுகள் இனங்காணப்படும் சமயத்தில் அந்த தயாரிப்பு தொகுதி நிராகரிக்கப்படுவதுடன், புத்தம்புதிய, பாதுகாப்பான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த தயாரிப்புக்கள் மாத்திரமே நுகர்வோரைச் சென்றடைவது உறுதி செய்யப்படுகின்றது.

பண்ணைகளிலும் அதியுயர் வெப்பநிலையில் பதப்படுத்தும் செயற்பாடு (Ultra High Temperature UHT) 140 பாகை வெப்பஅலகில் 4 செக்கன்களுக்கு இடம்பெற்று, ஊட்டச்சத்துக்கள் பேணிப் பாதுகாக்கப்படும் அதேசமயம், நோய்க் கிருமிகளை ஒழித்தலின் போது தீய்ந்து போன சுவை தென்படுவதும் தவிர்க்கப்படுகின்றது.

# புதிய பாதையை நோக்கி பயணிக்கும் அவுஸ்திரேலியா – இலங்கை உறவு

அவுஸ்திரேலியா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவை மேம்படுத்தும் நோக்கில், அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு அமைப்பு இலங்கை கரையோர பாதுகாப்புப் படைக்கு (SLCG) அனைத்து நிலப்பரப்புகளிலும் பயணிக்கக் கூடிய 3 வாகனங்களை (ATV) பரிசாக வழங்கியுள்ளது.




சிறிய ரக மோட்டார் பொருத்தப்பட்ட இந்த வாகனங்கள் (ATV) கரடு முரடான பாதைகளில் எளிதாக பயணிப்பதற்கு உதவியாக அமைவதோடு, இலங்கை கடலோர பாதுகாப்புப் படை(SLCG) இந்த வாகனங்களை பயன்படுத்தி, தமது ரோந்து பணிகளை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியும் என நம்பப்படுகிறது.

இவ்வருட ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய எல்லைப் படைத் தலைமையகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த, SLCG பணிப்பாளர் நாயகம், ரியர் அட்மிரல் பூஜித விதான, குறித்த ATV வாகனங்களை செலுத்தி சோதனை மேற்கொண்டிருந்ததோடு, இவ்வாகனங்கள் கரையோர ரோந்து நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமாக இருப்பதாகத் தெரிவித்திருந்தார். இந்நிகழ்வில் கருத்து வெளியிட்ட ரியர் அட்மிரல் பூஜித விதான "கடல்சார் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட நாம் உறுதி பூண்டுள்ளோம். இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த மூன்று ATV வாகனங்களும் எமது நடவடிக்கைத் திறனை மேம்படுத்தும்” என்றார்.

இந்த நன்கொடை தொடர்பில் குறித்து கருத்துத் தெரிவித்த, Joint Agency Task Force Operation Sovereign Borders (சுயாதிபத்திய எல்லைகள் நடவடிக்கைக்கான கூட்டு முகவர் நிறுவன) கொமாண்டர் ரியர் அட்மிரல் Brett Sonter, (Royal Australian Navy) "பிராந்திய கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு, திறன் மேம்பாடுகள் ஒரு முக்கிய அம்சமாகும்" என்றார்.




பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கென

# கனடாவிலிருந்து 3,000 திருக்குறள் பிரதிகள் இலங்கைக்கு அன்பளிப்பு

இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஏற்பாடு





கனடா, டொரண்டா நகரின் உலக ஒழுக்க நெறி கழகத்தின் தலைவரும், ஆன்மீகவாதியுமான திருமதி. யோகா பத்மநாதன், இலங்கையில் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்காக 15 இலட்சம் ரூபா பெறுமதியான 3,000 திருக்குறள் பிரதிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

திருமதி. யோகா பத்மநாதனிடம் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் திருக்குறள் பிரதிகளை அவர் இலவசமாக அனுப்பி வைத்துள்ளார்.

இத் திருக்குறள் பிரதிகள் ஆறு மாகாணங்களிலுள்ள பெருந்தோட்டப் பகுதியை அண்மித்த 863 பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன. அதன்படி, இதன் முதற்கட்ட நடவடிக்கையாக பதுளை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் தமிழ் மற்றும் சமய பாட ஆசிரியர்கள் பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்துக்கு அழைக்கப்பட்டு நேற்று முன்தினம் (15) திருக்குறள் பிரதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் உட்பட சரஸ்வதி தேசிய பாடசாலையின் அதிபர் கனகேந்திரன், முன்னாள் அதிபர் திருலோகசங்கர் மற்றும் பிரமுகர்களென பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நிலைப்பாடு 18 ஆம் திகதிக்கு பின்

தேசிய சபையின் தீர்மானத்தின் பின்னர் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் பல கட்சிகள் யாருக்கு ஆதரவு என்பதை வெளிப்படுத்தி வருகின்றன. எனினும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எந்த ஒரு தீர்மானத்தையும் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தேசிய சபை எதிர்வரும் 18ஆம் திகதி கூடவுள்ளது. அதன் பின்னரே இ.தொ.காவின் தீர்மானம் அறிவிக்கபடுமென கட்சி அறிவித்துள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக பல கட்சிகள் கையொப்பமிட்டு வருகின்றபோதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இதுவரை எவ்வித கையொப்பமும் இடவில்லை.

அதற்கு காரணம் தேசிய சபையின் அனுமதியின்றி கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர், தவிசாளர் என எவரும் எவ்வித முடிவும் எடுக்கமுடியாது. அந்தளவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தேசிய சபைக்கு அதிகாரம் உள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தேசிய சபை மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானால் உருவாக்கப்பட்டது. தேசிய சபையின் அங்கீகாரம் இன்றி கட்சியால் முடிவுகள் எடுக்கப்பட்டாலும் அம்முடிவுகள் செல்லுபடியாகாது.

கட்சியில் 500 அங்கத்தவருக்கு 01 தேசிய சபை உறுப்பினர் என்ற அடிப்படையில், 200 அங்கத்தவர்கள் தேசிய சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

அந்த தேசிய சபையில் எடுக்கப்படும் தீர்மானத்தையே கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர், தவிசாளர் என அனைவரும் பின்பற்ற முடியும். அவ்வாறே கட்சியின் அரசியலமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் சக்திவாய்ந்த முதுகெலும்பே தேசிய சபை. கடந்த காலத்தில் மறைந்த தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரால் தேசிய சபையின் அனுமதியுடனே முக்கிய தீர்வுகள் எட்டப்பட்டுள்ளது.

# 15 வயது இரண்டு மாணவிகள் மாயம் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

(ஊவா வெல்லவஸ்ஸ விஷேட நிருபர்)



வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டவெஹெரகலய பிரதேசத்தைச்சேர்ந்த 15 வயதுடைய இரண்டு மாணவிகள் நேற்று முன்தினம் (15) முதல் காணாமல் போயுள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லவாய பிரதேசத்தில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி பயிலும் இரு மாணவிகளே இவ்வாறு காணமல்போயுள்ளனர். கடந்த 14 ஆம் திகதி, கொட்டவெஹெரகல பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு மாணவியின் வீட்டுக்கு, அதே பிரதேசத்தைச் சேர்ந்த அம் மாணவியின் தொழியான மற்றுமொரு மாணவி படிப்பதற்காக சென்றுள்ளார். இந்நிலையில, மறுநாள் 15 ஆம் திகதி முதல் குறித்த இரு மாணவிகளையும் காணவில்லை என வீட்டின் உரிமையாளரினால் வெல்லவாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வெல்லவாய பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், இம் மாணவிகள் இருவரும், கித்துல்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களுடன் காதல் உறவை பேணி வந்ததாகவும், அவர்களுடன் சென்றிக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேசத்திற்குள் நடமாடும் சிறுத்தையால் அச்சம்

கண்டி, பதியபெலெல்ல, நுகயாய பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக மாலை நேரங்களில் சிறுத்தையொன்று நடமாடி வருவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறுத்தை, மான் போன்ற பல்வேறு விலங்குகளையும், வீடுகளில் வளர்க்கப்படும் நாய், மாடு போன்ற விலங்குகளையும் வேட்டையாடுவதாக பிரதேசவாசிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் ஏற்கனவே அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ள பிரதேசவாசிகள், இப் பிரச்சினைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், பொது மக்கள் மற்றும் குழந்தைகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என தெரிவித்துள்ளனர்.

# பெரும் வரவேற்பைப் பெற்றுவரும் "த ரூஸ் இன்ட் " குறுந்திரைப்படம்


லுணுகல நிருபர்

"த ரூஸ் இன்ட்" குறுந்திரைப்படம் எதிர்வரும் 24 ஆம் திகதி பதுளை ரெக்ஸ் திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

இத் திரைப்படமானது, இலங்கை குறுந்திரைப்பட கலைத்துறைக்கு உயிரூட்டும் வகையில், இராகலை பிரதேசத்தைச் சேர்ந்த ரொனியின் எழுத்தாக்கம், இயக்கம் மற்றும் தயாரிப்பில் வெளிவந்துள்ளது.

மலையகத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினையொன்றை மையப்படுத்தியே இக்குறுந்திரைப்படத்தை தயாரித்துள்ளார் தயாரிப்பாளர் ரொனி.

இக் குறுந்திரைப்படம் முதன்முதலாக இராகலை லக்மாலி திரையரங்கில் வெளியிடப்பட்டு, மக்களின் ஏகோபித்த வரவேற்பைப்பெற்றதோடு, தொடர்ந்து கொழும்பு திரையரங்கு ஒன்றிலும் திரையிடப்பட்டு இரசிகர்களின் வரவேற்பையும் பேராதரவையும் பெற்றது.




இந்நிலையில், எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு, பதுளை ரெக்ஸ் திரையரங்கில் திரையிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்விளக்குகளை பொருத்துமாறு வேண்டுகோள்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி அரச போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் வீதிக்கு, மின்விளக்குகளை பெற்று தருமாறு, சப்ரகமுவ பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள தலைமையில் இடம்பெற்ற, இரத்தினபுரி மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்திலேயே வைத்தியபீட மாணவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

இதன்போது, தாம் வைத்தியசாலைக்கு பயிற்சிக்குச் செல்லும் போது, வீதியில் மின்விளக்குகள் இன்மையினால் பாதுகாப்பு இல்லையென, சப்ரகமுவ பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தனமல்வில கூட்டு பாலியல் துஷ்பிரயோக சம்பவம்

# பெற்றோருக்கு அநாமதேய அழைப்புக்கள் ; விசாரணைகள் ஆரம்பம் – மேலும் 4 பேர் கைது

ஊவா சுழற்சி நிருபர்

தனமல்வில பகுதியில் பாடசாலை மாணவர்களினால் கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்ட 16 வயதான சிறுமியின் பெற்றோருக்கு, அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றமை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணைகளை நடத்தும் பொலிஸ் தலைமையக அதிகாரி என தெரிவித்து, அடையாளம் தெரியாத நபர்களினால் இவ்வாறு அழைப்புக்கள் வருவதாக சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



இதேவேளை, மாணவியை கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, இந்த சம்பவத்தில் பெண்ணொருவர் உட்பட கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளதுடன், சந்தேகநபர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட பாடசாலை அதிபர், உப அதிபர் மற்றும் இரண்டு ஆசிரியைகள் என நான்கு பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக கொழும்பு பொரள்ளை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் அனுசரணையோடு

# பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்று போட்டி இன்று!

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையோடு, மத்தியமாகாணம் கண்டி மாவட்டம் க/லூல்கந்துர தமிழ் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கட் சுற்று போட்டி இன்று (17) க/லூல்கந்துர தமிழ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. இப்போட்டி, நாளையும் (18) நாளை மறுதினமும் (19) இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், பள்ளி காலங்களில் பல பசுமையான நினைவுகளை மீட்டு பார்க்க, பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

# இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சப்ரகமுவ மாகாணத்தில் 20 கலாசார மையங்கள்!





காவத்தை தினகரன் விசேட நிருபர்

இந்தியாவின் 78 ஆம் ஆண்டு சுதந்திர தின நிறைவை முன்னிட்டு, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கு 20 கலாசார மையங்களை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவின் திஸாநாயக்கவின் வேண்டுகோளுக்கமைய இந்த கலாசார மையங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்தியா கோர்னர் (India Corner) என பெயரிடப்பட்ட இந்த கலாச்சார மையங்களின் முதலாவது நிலையம் அண்மையில் இரத்தினபுரி மத்திய நூலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவின் திஸாநாயக்க மற்றும் இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ்.அதிரா ஆகியோர் தலைமையில் இந்த கலாச்சார மையம் திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட இந்தியா கோர்னர் (India Corner) மையத்தினூடாக, பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அறிஞர்கள் மற்றும் மொழி கற்பவர்கள் உட்பட பொதுமக்களும் பயன்பெற முடியும்.

அதன்படி, இந்த மையங்களில் இந்திய கலாச்சாரம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழி கற்றல் உள்ளிட்ட பல துறைகளைச் சார்ந்த புத்தகங்களினூடாக எமது அறிவையும் வளர்த்துக்கொள்ள கூடியதாக இருக்கும். இந்நிலையில், எதிர்வரும் காலங்களிலும், இந்தியா கோர்னருக்கு (India Corner) E Library உதவியை பெற்று கெடுப்பதற்காக இந்திய அரசு திட்டமிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பதுளையில் ஆசிரியை தாக்கப்பட்ட சம்பவத்தில் பாடசாலையின் உபஅதிபர் உட்பட நால்வர் கைது

பதுளை மாவட்டம் வெளிமடை கல்வி பணிமனைக்குட்பட்ட உடப்புஸ்ஸலாவை அலக்கொலை தமிழ் வித்தியாலயத்தில் பணியாற்றும் ஆசிரியை ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் பாடசாலையின் உப அதிபர் உட்பட நால்வர் நேற்று முன்தினம் (15) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

டெல்மார் தோட்டத்தை சேர்ந்த குறித்த ஆசிரியை தனது கடமை நேரத்தில் இருந்தபோதே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக ஊவாபரணகம பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 13 ஆம் திகதி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில், தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (15) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான ஆசிரியை உடப்புஸலாவை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, தற்போது வீடு திரும்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியை அளித்துள்ள முறைப்பாட்டில், தான் பணியாற்றும் பாடசாலையில், அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள் சிலர் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். தன்னை தாக்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தனக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊவாபரணகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆ.ரமேஸ்

# குளவிக் கொட்டுக்கு இலக்கான 18 பேர்

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெர்கஸ் வோல்ட் தோட்டத்தில், 18 தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியவர்களில், 10 பேர் தோட்ட வைத்தியசாலையிலும், கவலைக்கிடமான நிலையிலுள்ள 8 பேர் பொகவந்தலாவை வைத்தியசாலையிலும் அனுமதிக்க தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# நகர்வலம்



## தம்புள்ளையில் காட்டு யானை மீது துப்பாக்கிச் சூடு

(தம்புள்ளை நிருபர்)



தம்புள்ளை பகமூன பிரதான வீதியின் பகமூன தமனயாய தம்புர பிரதேசத்தில் காட்டு யானை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் (15) இரவு இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பக்கமூன வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

35 வயதான 'ராஜா' என அழைக்கப்படும் காட்டு யானையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த யானைக்கு ஒரு கண் பார்வை தெரியாது எனவும் கூறப்படுகிறது. காட்டு யானையால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸார் முச்சக்கரவண்டியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, பொலிஸ் உத்தியோகத்தர்களை காட்டு யானையை தாக்க முற்பட்டதாகவும், இதனால் ரி 56 ரக துப்பாக்கியால் காட்டு யானையை சுட்டுக்கொன்றதாகவும் பகமூன பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு அப்பகுதி மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஹபரணை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடல தெரிவித்துள்ளார்.

## பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் மூத்த உலமா மௌலவி எச். ஸலாஹுதீன் நினைவுகள்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் 'பாரம்பரியம்' நிகழ்ச்சித் தொடரில் மூத்த சன்மார்க்க அறிஞர் மர்ஹூம் கண்டி மௌலானா மௌலவி எச்.ஸலாஹுதீனின் நினைவுகள் பகிரப்படவுள்ளன.

நிகழ்ச்சியின் அதிதிகளாக, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கண்டி மாவட்டத் தலைவரும், கண்டி 'புர்கானிய்யா' அரபுக்கல்லூரி பணிப்பாளருமான மௌலவி எச். ஒமர்தீன், சிரேஷ்ட எழுத்தாளர் கவிஞர் சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், மௌலவி எச்.ஸலாஹுத்தீன் இளைய சகோதரரான முஹம்மத் நஸீர் அவர்களின் புதல்வர் மௌலவி நஸீர் இம்ரான் முஹம்மத் ஆகியோர் பங்கேற்று, மௌலவி ஸலாஹுதீனின் முஸ்லிம் சேவையுடனான தொடர்பு, இதர சமூக எழுத்து பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்து வழங்கவுள்ளார்.





புத்தளம் வரலாற்று சிறப்பு வாய்ந்த பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பிஷாடனர் உற்சவம் நேற்று நடைபெற்றது. இதன்போது அம்பாள் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டு, ஊர்வலமும் நடைபெற்றது. அம்பாள் ஊர்வலத்தில் பக்த அடியார்கள் பலர் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக்கொண்டனர். (படங்கள் :உடப்பு குறூப் நிருபர்)

## மாபெரும் இஸ்லாமிய மார்க்கச் சொற்பொழிவு

(பேருவளை விசேட நிருபர்)



பேருவளை காலி வீதி சி மி ச் (ZMICH) வரவேற்பு மண்டபத்தில் மாபெரும் இஸ்லாமிய மார்க்கச் சொற்பொழிவு நிகழ்வு நாளை 18 ஆம் திகதி ஞாயிற்று கிழமை பி.ப.4.00 மணிக்கு நடைபெறும்.

கட்டார் ஹம்மாத் பின் கலீபா சர்வதேச இஸ்லாமிய பல்கலைகழக பேராசிரியர் கலாநிதி தீன் முஹம்மத் (அல்அஸ்ஹரி) இஸ்லாமிய சிந்தனையும் நவீன சவால்களும் என்ற தலைப்பில் விஷேட சொற்பொழிவுவாற்றுவர் என மௌலவி ஏ.ஸி.ஏ.ஏ.ஸஹில்(அல்அஸ்ஹரி) தெரிவித்தார்.

## சஹ்மியின் சாதனைப் பயணத்திற்கு SJB பேருவளை அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் வாழ்த்து!

(பேருவளை விசேட நிருபர்)



இலங்கையர் அனைவரும் மனித நேயம் மிக்கவர்கள் என்ற அடிப்படை மனோதத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் நோக்குடன் இலங்கைத் தீவை நடைபயணமாக சுற்றிவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பேருவளையைச் சேர்ந்த சஹ்மிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பேருவளை அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் கூறியதாவது;

அசாதாரண முயற்சியில் துணிவுடன் களமிறங்கியுள்ள சஹ்மியின் சாதனைப்பயணம், பேருவளை மண்ணிற்கு பெருமையை தேடித் தந்துள்ளது. மேலும் இப்பயணம் கரையோரப் பிராந்தியத்தின் சுற்றுலாத்துறையிலும் பெரும் பங்களிப்பு செலுத்தும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

சஹ்மியின் இப்பயணம் உற்சாகமாக முன்னேறிச் செல்வதற்கு ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து ஊர் மக்களுக்கும் பேருவளை மக்கள் சார்பாக நான் நன்றி கூறுகிறேன். மேலும் இப்பயணம் எந்தத் தடையும் இன்றி வெற்றிகரமாக முடிவதற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி விவசாயி உயிரிழப்பு

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

அநுராதபுரம் பரசன்கஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி விவசாயியொருவர் உயிரிழந்துள்ளார். பரசன்கஸ்வெவ பலுகும்பர பகுதியைச் சேர்ந்த எச்.ஏ.சுனில் என்ற 65 வயதுடைய விவசாயி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டு மதியம் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

கூடு ஒன்றை உடைக்க முயன்ற போது குளவிக் கொட்டி இவர் காயமடைந்துள்ளார். இந்நிலையில் காயமடைந்தவர் பரசன்கஸ்வெவ பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒப்பனை அலங்காரத் துறையில் சாதனை நிகழ்த்த வாய்ப்பு

சோலன் புக் ஓஃப் வேல்ட் றெக்கோர்ட் இன்று 17ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக "ஹஸ்மா பிறைடல் அகடமியின்" பணிப்பாளர் ஹஸ்மா மலிக் தெரிவித்தார்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு மருதானையிலுள்ள அகடமியின் காரியாலயத்தில் நடைபெற்றது.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: சோலன் புக் ஓஃப் வேல்ட் றெக்கோர்ட் 190 நாடுகளில் இயங்கி வருவதுடன் இம்முறை இலங்கையிலும் ஒப்பனை அலங்காரத் துறையில் இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இதில் கலந்து கொண்டு சாதனை பெறுபவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் இந்தத்துறையில் முன்னேறக்கூடிய சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. இன்று 17ம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வில் 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

தரமான சான்றிதழை பெற்று எதிர்காலத்தில் சிறந்த முறையில் இந்தத் துறையில் முன்னேற இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை காரியாலயம் திறந்து வைப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் காரியாலயம் புத்தளம் இரண்டாம் குறுக்குத் தெருவில் அண்மையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் கிளை மற்றும் மாவட்டத்தின் முன்னாள் தலைவர் அஷ்ஷேக் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் மாவட்டத்தின் தலைவர் அஷ்ஷேக் தமீம் (ரஹ்மானி) ஆகியோரால் இக் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக்கிளையின் உறுப்பினர் அஷ்ஷேக் ஆதீப் (ரஹ்மானி) கிராஅத் ஓதி ஆரம்பித்து வைத்தார்.அதனை தொடர்ந்து தலைமை உரை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸினால் (அல் மிஸ்பாஹி) நடத்தப்பட்டது. விசேட உரை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் மற்றும் மாவட்டத்தின் முன்னாள் தலைவர் அஷ்ஷேக் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிமினால் நிகழ்த்தப்பட்டது. புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும், சிறப்பு அதிதிகளாக ஓய்வு நிலை கல்விப்பணிப்பாளர் இஸட்.ஏ.சன்ஹிர், ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ். ஆர்.எம்.சலீம், ஸாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் ஐ.ஏ. நஜீம், ஸாஹிரா ஆரம்ப பாடசாலையின் அதிபர் எஸ்.ஆர்.முஹ்ஸி, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் மாவட்டத்தின் செயலாளர் அஷ்ஷேக் அப்துர் ரசீத், நகர சபையின் நிர்வாக அதிகாரி நௌசாத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வில் "மாஸ்டர் மொபைல்" நிறுவனத்தின் உரிமையாளர் எம். அஸ்பி, ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளைக்கு மைக் செட் ஒன்றையும் அன்பளிப்பு செய்தார்.

ஒன்றுடன் ஒன்று மோதி

## மோட்டார் சைக்கிள்கள் விபத்து

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்புள்கம, பனாகொட வீதியின் ஜல்தர பகுதிலேயே இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன்ஒன்று மோதியதை அடுத்து, ஒரு மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த தொலைபேசி கம்பத்தில் மோதியுள்ளது. இவ்விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்களிலும் பயணித்த இருவர் காயமடைந்து ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தெடிகமுவ பகுதியைச் சேர்ந்த 18 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## யாழிலிருந்து மற்றுமொரு இளைஞன் நடைபயணம்: அநுராதபுரத்தில் பெரும் வரவேற்பு

(திறப்பனை தினகரன் நிருபர்)



யாழ்.நல்லூர் ஆலயத்திலிருந்து நடைபயணத்தை ஆரம்பித்த சிவானந்தன் பவித்ரன் என்ற இளைஞன் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் இக்கிரிகொல்லாவை பகுதியை வந்தடைந்தார். கடந்த10 ஆம் திகதி தனது நடைபயணத்தை யாழ்ப்பாணம் நல்லூரில் வைத்து ஆரம்பித்த இவர் 05 ஆவது நாளாக நேற்றுமுன்தினம் அநுராதபுரம் இக்கிரிகொல்லாவையை நண்பகல் வந்தடைந்தார். இன மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும், உடல் ஆரோக்கியத்தை வலியுறுத்தும் வகையிலும் நடைபயணமாக வந்த இளைஞனை அப்பகுதி மக்கள் பெரும் ஆதரவுடன் வரவேற்றனர்.

இக்கிரிகொல்லாவ ஐடீஎச் (IDH) தமிழ் மீடியா மற்றும் இக்கிரிகொல்லாவ கிராம மக்கள், அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையின் அநுராதபுர கிளையும் இணைந்து வரவேற்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.இந்நிகழ்வின் போது இளைஞனின் உடல் ஆரோக்கியத்திற்காகவும் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்காகவும் விசேட துஆ பிரார்த்தனைகளும் இங்கு இடம்பெற்றன. வரவேற்பு நிகழ்வில் ஒன்று கூடிய பொதுமக்கள் நடைபயணமாக வந்த இளைஞனுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்து கொண்டனர். இளைஞன், மாவட்டத்தின் முக்கிய இடங்களில் மரக்கன்றுகளையும் நட்டி வைக்கவுள்ளார்.

## வட மாகாண செல்ல குரலுக்கான தேடல் ஜூனியர் சுப்பர் சிங்கர் வவுனியாவில் இன்று

C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடனும் வட மாகாணத்தில் நடத்தி வரும் வடக்கின் செல்லக்குரலுக்கான தேடலின் குரல் தேர்வுக்குரிய ஜூனியர் சுப்பர் சிங்கர் போட்டியின் வவுனியா மாவட்டத்துக்கான போட்டி இன்று வவுனியாவிலும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான போட்டி நாளை வவுனியாவிலும் நடைபெறவுள்ளது.

வட மாகாண செல்ல குரலுக்கான தேடல் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் முல்லைத்தீவு மாவட்ட போட்டிகள் நாளை 2024.08.18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட போட்டியாளர்களுக்கு நேர்முகத் தேர்வு இல்லை. அவர்கள் நேரடியாக நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் குரல் தேர்வுக்கு தோற்ற முடியும்.

வவுனியா மாவட்ட போட்டியாளர்கள் இன்று 2024.08.17ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். இவர்களுக்கான முதலாவது சுற்றுப் போட்டி நாளை 2024.08.18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

இவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் குரல் தேர்வின் போது இசை இல்லாது பாட வேண்டும். முதலாம் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு அதே தினமான நாளை 2024.08.18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் சுற்று நடைபெறும்.

இரண்டாம் சுற்றின் போது பக்தி பாடல் ஒன்றும் பாரம்பரிய இசை பாடல் (கிராமிய துள்ளல் இசை பாடல் classical music) ஒன்றும் பாட வேண்டும். இரண்டையும் பயிற்சி செய்து அதற்குரிய கரோக்கியை +94 78 888 8585 என்ற whats app இலக்கத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



சாஃப் இளையோர் கால்பந்து

# நேபாள அணிக்கு எதிராக இலங்கை நாளை களத்தில்



நேபாளத்தில் நாளை (18) ஆரம்பமாகும் 20 வயதுக்கு உட்பட சாஃப் சம்பியன்சிப் போட்டிக்கு மொஹமட் முன்சிப் தலைமையில் இலங்கை அணி பங்கேற்கவுள்ளது.

இந்தத் தொடரில் இலங்கை அணி போட்டியை நடத்தும் நேபாளம் மற்றும் பங்களாதேஷுடன் ஏ குழுவில் இடம்பெற்றுள்ளது. இதன்படி நாளை காத்மண்டு, தஷ்ரத் ரன்கசலா அரங்கில் நடைபெறும் முதல் போட்டியில் இலங்கை இளையோர் அணி நேபாளத்தை எதிர்கொள்ளவுள்ளது.

இந்தப் போட்டி இலங்கை நேரப்படி நாளை பிற்பகல் 3.45 இற்கு ஆரம்பமாகும். இலங்கை அணி தனது முதல் சுற்றில் பங்களாதேஷுக்கு எதிராக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (20) விளையாடவுள்ளது.

இந்தப் போட்டியும் அதே மைதானத்தில் பிற்பகல் 3.45 இற்கு ஆரம்பமாகும்.

# புத்தளம் சாஹிரா தேசிய கால்பந்து போட்டிக்கு தகுதி

**புத்தளம் தினகரன் நிருபர்**



இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 16 வயதுக்கு உட்பட்டோருக்கான கால்பந்தாட்ட போட்டியில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை அணி அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தகுதிபெற்றது.

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் கடந்த வியாழக்கிழமை (15) நடைபெற்ற போட்டியில் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் அணிக்கு எதிராக 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றே புத்தளம் சாஹிரா தேசிய போட்டிக்கு தெரிவானது. இதன்போது புத்தளம் சாஹிரா சார்பில் வை.எம்.ரிலான் மற்றும் கே.ஆர்.பர்வீஸ் கோல் புகுத்தியதோடு, அஸன் குத்தூஸ் அணிக்காக முஹம்மது இர்பான் கோல் பெற்றார்.

ஊக்கமருந்து தடுப்பு விவகாரம்:

# அனைத்து வகையான கிரிக்கெட்டில் இருந்தும் திக்வெல்ல இடைநிறுத்தம்



அண்மையில் முடிவுற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது ஊக்கமருந்து தடுப்பு விதியை மீறியதாக குற்றம்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அணி வீரர் நிரோஷன் திக்வெல்ல அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விக்கெட் காப்பாளரான 31 வயது திக்வெல்ல விசாரணைக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையிலேயே காலவரையற்ற தடையை எதிர்கொண்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது திக்வெல்ல கொக்கெய் போதைப்பொருளை பயன்படுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.

இது தொடர்பில் உத்தியோகபூர் அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கை அணி சார்பில் இதுவரை 54 டெஸ்ட், 55 ஒருநாள் மற்றும் 28 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் நிரோஷன் திக்வெல்ல இந்த ஆண்டின் லங்கா பிரீமியர் லீக் தொடரில் கோல் மார்வல்ஸ் அணியின் தலைவராக செயற்பட்டார். அவரது அணி எல்.பி.எல். தொடரின் இறுதிப் போட்டிவரை முன்னேறியபோதும் ஜப்னா கிங்ஸ் அணியிடம் சம்பியன் கிண்ணத்தை இழந்தது.

எனினும் கடந்த காலங்களிலும் ஒழுக்காற்று விவகாரங்களில் சிக்கியிருக்கும் திக்வெல்ல அண்மைக் காலமாக இலங்கை அணியில் இடம்பெறத் தவறி வருகிறார்.

அவர் இலங்கை அணிக்காக கடைசியாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியிலேயே ஆடியிருந்தார். எனினும் அவர் ஒருநாள் போட்டி ஒன்றில் இலங்கை அணிக்காக ஆடி இரண்டு ஆண்டுகள் கடந்திருப்பதோடு டி20 போட்டியில் வாய்ப்புப் பெற்று மூன்று ஆண்டுகளுக்கு மேலாகும்.

## சர்வதேச செய்திகள்

# காசா போர் நிறுத்தப் பேச்சு 2ஆவது நாளாக நீடிப்பு: இஸ்ரேல் தொடர்ந்து சரமாரி தாக்குதல்



காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை கட்டார் தலைநகர் டோஹாவில் நேற்று (16) இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது.

காசா போரை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் பல மாதங்களாக விட்டு விட்டு இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் இன்னும் உடன்பாடு ஒன்றை எட்ட முடியாமல் போயுள்ளது.

10 மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் போரில் 40,000 இற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருக்கும் நிலையிலேயே புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் (15) மீண்டும் ஆரம்பமானது. எனினும் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இஸ்ரேல் முட்டுக்கட்டையாக இருப்பதாகக் கூறி இந்தப் பேச்சுவார்த்தையை ஹமாஸ் அமைப்பு புறக்கணித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை நம்பிக்கை தரும் ஆரம்பத்தை பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் பேச்சாளர் ஜோன் கிர்பி, முன்னேற்றம் காண வேண்டிய பல விடயங்கள் தொடர்ந்து நீடிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கும் பிரதான நாடாக உள்ள அமெரிக்காவுடன் கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்று எட்டப்படுவது பிராந்தியத்தில் ஏற்பட்டிருக்கும் போர் பதற்றத்தை தணிக்க உதவும் என்று அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள் நம்புகின்றன.

'இது மத்திய கிழக்கின் ஆபத்தான நேரம். நிலைமை கட்டுப்பாட்டை இழக்கக் கூடிய அச்சுறுத்தல் உள்ளது' என்று பிரான்ஸுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பிரிட்டன் வெளிவிவகார செயலாளர் டேவிட் லாமி குறிப்பிட்டார்.

இதன்போது இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் இஸ்ராயேல் காட்ஸ் மற்றும் மூலோபாய விவகார அமைச்சர் ரொன் டெர்மரை சந்தித்திருக்கும் லாமி, காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதில் அனைத்து தரப்புக்கும் தாமதிப்பதற்கு அல்லது சாக்குப்போக்கு கூறுவதற்கு நேரமில்லை என்று வலியுறுத்தியுள்ளார்.

'தற்போதைய சூழலில் எந்த ஒரு தவறான செயற்பாடும் பொதுவான மோதல் ஒன்றை தூண்டிவிடும்' என்று பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஸ்டபனே செஜோர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே ஈரான் தலைநகர் டெஹ்ரானில் அண்மையில் படுகொலை செய்யப்பட்டது மற்றும் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா முன்னணி தளபதி ஒருவர் கொல்லப்பட்டதற்கு இஸ்ரேல் மீது பழிதீர்ப்பதற்கு ஈரான் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகள் உறுதிபூண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்டாரில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கட்டாருக்கு தனது பிரதிநிதிகளை அனுப்பிய அதேநேரம் கடந்த வியாழக்கிழமை வடக்கு காசாவில் இடம்பெற்ற மற்றொரு வான் தாக்குதலில் தகர்க்கப்பட்ட கட்டடத்தில் சிக்கியுள்ள கொல்லப்பட்டர்களின் உடல்களை மீட்பதற்கு பலஸ்தீனர்கள் போராடி வந்தனர்.

'நாம் இங்கே கொல்லப்பட்டுக் கொண்டு இருக்கும்போது நெதன்யாகு ஏன் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும்?' என்று ஜபலியாவைச் சேர்ந்த முஹமது அல் பல்வி கேள்வி எழுப்பினார். அவரைச் சூழ கொங்கிறீட் இடிபாடுகளில் இருந்து உடல்கள் மீட்கப்பட்டு வந்தன.

ஜபலியாவில் உள்ள குடியிருப்புக் கட்டடம் ஒன்றின் மீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தி இருந்தது. இதில் ஆறு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலையிலும் இஸ்ரேல் நடத்திய வான் மற்றும் பீரங்கி தாக்குதல்கள் அதே போன்று துப்பாக்கிச் சூடுகளில் பலரும் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. காசா நகரில் அல் தராஜ் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய செல் தாக்குதலில் அபூ பஷர் வஹிதி குடும்பத்தைச் சேர்ந்த ஐவரின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் மேலும் பலர் காயமடைந்ததாகவும் வபா குறிப்பிட்டது.

கொல்லப்பட்டவர்களில் அபூ பஷர் வஹிதி, அவரது மனைவி, அவரது மகன் பஷர் மற்றும் அவரது 13 வயது மகள் ஆகியோர் அடங்குகின்றனர்.

காசா நகரில் ஷுஹதா சந்தியில் நிலைகொண்டிருக்கும் இஸ்ரேலிய இராணுவ வாகனங்கள் அல் செய்தூன் பகுதியில் உள்ள மக்கள் குடியிருக்கும் வீடுகள் மீது சூடு நடத்தியுள்ளன. எகிப்து எல்லையை ஒட்டிய தெற்கு நகரான ரபாவில் இஸ்ரேலியப் படை சரமாரி பீரங்கி தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இதேவேளை முன்னர் மனிதாபிமான வலயங்களாக அறிவிக்கப்பட்டிருந்த தெற்கு மற்றும் மத்திய காசா பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் நேற்று (16) உத்தரவிட்டது. இந்தப் பகுதிகளை இஸ்ரேலை நோக்கி மோட்டார் மற்றும் ரொக்கெட் குண்டுகளை வீச ஹமாஸ் பயன்படுத்தி வருவதாக அது குறிப்பிட்டுள்ளது.

தெற்கு நகரான கான் யூனிஸின் வடக்கு பகுதி மற்றும் ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் கூடாரங்கள் நிரம்பியுள்ள மத்திய காசாவின் டெயிர் அல் பலாவின் கிழக்கு பகுதியில் இருந்தே மக்களை வெளியேற உத்தரவிட்டுள்ளது. வானில் இருந்து துண்டுப்பிரசுரங்களை வீசியும் குறுஞ்செய்தி மூலமும் மக்கள் அறிவுறுத்தப்பட்டதாகவும் அது குறிப்பிட்டது.

# மேற்குக் கரை கிராமம் மீது இஸ்ரேலியர்கள் தாக்குதல்



இஸ்ரேலிய குடியேறிகள் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை கிராமம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அங்குள்ள வீடுகள் மற்றும் கார்கள் மீது தீவைத்துள்ளனர். இந்த சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முகமூடி அணிந்து வந்த குடியேறிகள் கடந்த வியாழக்கிழமை (15) இரவு நப்லுஸ் நகருக்கு அருகில் உள்ள ஜிட் கிராமத்தில் கற்கள் மற்றும் பெட்ரோல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இதில் தனது 20 வயதுகளில் இருக்கும் உள்ளூர் கிராமவாசி ஒருவர் கொல்லப்பட்டு மற்றும் ஒருவர் நெஞ்சில் காயத்துக்கு உள்ளாகி உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு கூறியது.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

குடியேறிகளின் இந்தத் தாக்குதல் ஏற்க முடியாதது என்றும் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. இவ்வாறான தாக்குதல்கள் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந்து கண்டனங்களை வெளியிடுகின்றபோதும் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறி வருகிறது. வன்முறையில் ஈடுபடும் குடியேறிகள் மீது தடை விதிப்பது பற்றி அமெரிக்கா கூறியபோதும் இந்த வன்முறையில் ஈடுபடும் பெரும்பாலானவர்கள் அமெரிக்க இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காசாவில் போர் வெடித்த கடந்த ஒக்டோபர் தொடக்கம் இஸ்ரேலிய குடியேறிகளால் பலஸ்தீனர்களுக்கு எதிராக 1000க்கும் அதிகமான தாக்குதல் சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

தமது கிராமங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு குடியேறிகளுக்கு இஸ்ரேலிய பாதுகாப்பு படை அனுமதி அளிப்பதாக பலஸ்தீனர்கள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர்.

# தாய்லாந்தில் சினவாத்ரா வம்சத்தில் புதிய பிரதமர்



தாய்லாந்து முன்னாள் பிரதமரும் பெரும் செல்வந்தருமான தக்சினின் 37 வயது மகள் பேடோங்டர்ன் சினவாத்ரா அந்நாட்டின் புதிய பிரதமராக பாராளுமன்றத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதன்மூலம் தாய்லாந்தில் மிக இளம் வயதுடைய பிரதமராகவும் அவரது சித்தியான யிங்லுக்கிற்கு அடுத்து நாட்டின் இரண்டாவது பெண் பிரதமராகவும் பதிவாகியுள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றத்தால் பதவியில் இருந்த பிரதமர் ஸ்ரேத்தா தவிசீனை பதவி நீக்கிய நிலையிலேயே புதிய பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் சினவாத்ரா வம்சத்தில் இருந்து பிரதமர் பதவியை ஏற்கும் நாலாமவர் இவராவார். எனினும் அவரது தந்தை மற்றும் சித்தி உட்பட மற்ற மூவரும் இராணுவ சதிப்புரட்சி மூலம் அல்லது அரசியலமைப்பு நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

நாட்டில் அரச குடும்பம் மற்றும் தக்சீனுடன் தொடர்புடைய பிரபல அரசியல் கட்சிகள் இடையே நீடித்து வரும் முறுகல் நிலையின் தொடர்ச்சியாகவே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

# 'குரங்கம்மை' முதல்முறை ஆபிரிக்காவுக்கு வெளியே பரவல்: பாகிஸ்தானிலும் சம்பவம்



குரங்கம்மை தொற்றின் மிக அபாயகரமான பிறழ்வு ஒன்று ஆபிரிக்காவுக்கு வெளியில் முதல் முறை சுவீடனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதல் நோய் சம்பவம் பற்றி நேற்று முன்தினம் அறிவித்த சுவீடன் அரசு எதிர்வரும் நாட்களில் அது பிராந்தியத்தில் பரவக்கூடும் என்று தெரிவித்துள்ளது. கொங்கோவில் பதிவான Clade 1b வகை குரங்கம்மை சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் சிகிச்சை நாடிய ஒருவரிடம் இருப்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

ஆபிரிக்கக் கண்டத்துக்குச் சென்றபோது அவருக்கு அந்த நோய் தொற்றியதாக மருத்துவர்கள் கூறினர்.

இதேவேளை பாகிஸ்தானிலும் இந்த குரங்கம்மை பிறழ்வு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து பாகிஸ்தான் திரும்பிய மூவர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த குரங்கம்மை தொற்றினால் கொங்கோவில் 450 பேர் வரை உயிரிழந்திருப்பதோடு இந்த நோய்த் தொற்று தற்போது மத்திய மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளுக்கு பரவியுள்ளது. உலக சுகாதார அமைப்பு கடந்த புதனன்று குரங்கம்மையை உலக பொது சுகாதார அவசரநிலையாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

நெருக்கமான தொடர்புகளால் பரவும் இந்தத் தொற்றில் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்படுவதோடு ஆபத்தான தோல் புண்கள் ஏற்படும். இதில் தொற்றுக்கு உள்ளான 100 பேரில் நால்வர் மரணிக்கும் அபாயம் உள்ளது.

# ரஷ்யாவுக்குள் உக்ரைனின் இராணுவ தளம் அமைப்பு



ரஷ்யாவில் தன்னுடைய ஊடுருவலை உக்ரைன் இராணுவத்தினர் தொடரும் சூழலில் ரஷ்யாவின் மேற்கு குர்ஸ்க் பிராந்தியத்தில் இராணுவ நிர்வாக மையத்தை அமைத்துள்ளதாக உக்ரைன் மூத்த இராணுவ தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அந்த பிராந்தியத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டவும் அங்குள்ள மக்களின் உடனடி தேவைகளை பூர்த்தி செய்யவும் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது என்று இராணுவ தளபதி ஒலெக்ஸாண்டர் சிர்ஸ்கி தெரிவித்தார். உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கி தலைமையிலான ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைனிய துருப்புகள் 35 கிலோமீற்றர் தூரம் வரை உள்ளே சென்றுள்ளனர் என்றும் 82 குடியிருப்பு பகுதிகள் உட்பட 1,150 சதுர கிலோ மீற்றர் பரப்பை ஆக்கிரமித்துள்ளனர் என்றும் தளபதி சிர்ஸ்கி தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு ரஷ்யாவின் படையெடுப்புக்குப் பின்னர், கடந்த 10 நாட்களாக உக்ரைன் படைகள் ரஷ்யாவில் முன்னேறி வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 17ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.